# பூர்வத்திலுள்ள ஸ்திரீகள்



டாக்டர். ஜாய்ஸ் கிறிஸ்டோபர் D.Min.,

# பூர்வத்திலுள்ள ஸ்திரீகள்

ஆசிரியர்

**திருமதி. Dr. ஜாய்ஸ் கிறிஸ்டோபர்**


வெளியிடுபவர்

**விண்ணக அப்பம்**

நேருவீதி, சூரம்பட்டி,

ஈரோடு - 9. தென் இந்தியா.



| | | |
|---|---|---|
| FIRST EDITION | - | Oct - 2013 |
| TOTAL COPIES | - | 1000 |
| COPY RIGHT | - | WINNAGA APPAM |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 62 |



FOR DETAILS CONTACT

**WINNAGA APPAM**

No.4/2, Nehru Street, Soorampatti,
Erode - 638 009. S. India.
Phone / Fax : (0424) 2277286
E-mail : erodeipa@yahoo.com
website : www.erodeipa.org
Bank of India (Erode Branch)
A/c. No. 820210100005638
A/c Name : C. Alex Dhinakaran

# அணிந்துரை



**திருமதி. கெத்சியாள் பிரகாசம்**
பெத்தேல் மாநகர பேராலயம், கோயம்புத்தூர்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். பூர்வத்திலுள்ள ஸ்திரீகள் என்ற புத்தகத்திற்காக கர்த்தரை துதிக்கிறேன். இதன் ஆசிரியர் **டாக்டர். ஜாய்ஸ் கிறிஸ்டோபர்** அவர்களை நன்கு அறிவேன்

இவரின் கணவர் திருமறை அறிஞர். கிறிஸ்டோபர் அவர்களை ஆவிக்குரிய தமிழ் உலகத்தில் அறியாதவர் எவரும் இருக்க முடியாது. எங்கள் I.P.A. ஸ்தாபனத்தோடு இணைந்து மிக நேர்த்தியாய் ஊழியம் செய்தவர். சகோதரி தனது கணவரின் காலத்திற்கு பின்பு அந்த ஊழியத்தை தொடரும் இவரது மகனை ஜெபத்தாலும், ஆலோசனை யாலும் தாங்கி வரும் அதே சமயத்தில் அநேக பெண் களுக்கு ஆசீர்வாதமாகவும் இருந்து வருகிறார் எழுதும் கிருபையை இந்த குடும்பத்தின் மேல் கர்த்தர் வைத்திருக்கிறார் என்பது இந்த புத்தகத்தை வாசிக்கும் போது நமக்கு புரியும்.

ஆவிக்குரிய உலகில் அநேக புத்தகங்கள் இருந்தாலும் பெண்களுக்கென்று பிரத்யேக புத்தகம் சொற்பமாகத்தான் உள்ளது. இந்த சூழலில் இவர்களது இந்த புத்தகம் அவசியமானது, விசேஷமானது.

வேதாகம பெண்களின் வாழ்க்கையை நேர்த்தியாய் விளக்கி நடைமுறை வாழ்க்கையின் சத்தியங்களை தனது அனுபவத்தோடு இவர் விவரித்திருப்பது மிக அருமையாகயும் அனுபவப்பூர்வமாகவும் இருக்கிறது.

நிச்சயம் இது அநேக பெண்களுக்கு ஆசீர்வாதமாக அமையும். இது இவரின் முதற்படைப்பு. இதுபோன்ற புத்தகங்களை தொடர்ந்து வெளியிட கர்த்தர் கிருபை செய்வாராக! ஆமென்!



# என்னுரை

இனிய வாசகர்களுக்கு! இரட்சகரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சுகமாயிருப்பீர்களாக. பூர்வத்திலுள்ள ஸ்திரீகள் என்ற இந்த புத்தகத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன், ஆண்டவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

சிருஷ்டிப்பிலிருந்து சிலுவை வரைக்கும், சிலுவையில் இருந்து சிங்காசனம் வரைக்கும் பெண்கள் மிக முக்கியமான இடத்தை பிடித்திருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்கவே முடியாது. இன்று சபைகளை நிரப்பி வரும் பெண்களின் பெரும்திரள் கூட்டம் இதற்கு ஓர் சான்று.

உலகப் பெண்களை காட்டிலும் உன்னத தேவனை சேவிக்கும் பெண்களின் பண்பும், பொறுப்பும் மிக முக்கியமானது. இதை இந்தப் புத்தகம் அழுத்தமாய் உணர்த்தும். கடந்த நாட்களில் பெண்கள் ஊழியத்தில் கர்த்தர் கற்றுக் கொடுத்ததிலிருந்து நான் பிரசங்கித்த சத்தியங்கள் என் வாழ்க்கைக்கும், மற்றவர்களின் வாழ்க்கைக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. அதையே புத்தகமாக எழுதியிருக்கிறேன்.

இந்த அற்புதமான தருணத்தில் கர்த்தர் எனக்கு தந்த கணவர் திருமறை அறிஞர் டாக்டர்.கிறிஸ்டோபர் அவர்களை நினைவு கூறுகிறேன். அவர் தற்போது தேவ

ராஜ்ஜியத்தில் இருந்தாலும் அவரின் ஊக்கம் எனது உந்துவிசை என்பதை பதிவு செய்கிறேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய கர்த்தரால் வல்லமையாய் பெண்கள் மத்தியில் பயன்படுத்தப்பட்டு வரும் திருமதி. கெத்சியாள் பிரகாசம் அவர்களுக்கு எனது நன்றி. அதுபோல, இந்த பணியில் எனக்கு உதவியாய் இருந்த எனது பிள்ளைகள், விசுவாச மக்கள், குடும்பத்தார் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை வாசியுங்கள்! தேவனை விசுவாசியுங்கள்! தேவன் கொடுத்ததை நேசியுங்கள்! பரிசுத்தத்தை சுவாசியுங்கள்! கர்த்தரில் வாழ வளர கர்த்தர் கிருபை செய்வாராக. ஆமென்.

மகிமை அனைத்தும் கர்த்தருக்கே!

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
**ஜாய்ஸ் கிறிஸ்டோபர்**



# அர்ப்பணம்



எனது கணவர் காலம் சென்ற திருமறை அறிஞர்
**Rev. Dr. A. கிறிஸ்டோபர்** அவர்களின்
நினைவாக இந்நூலை
தேவகரத்தில் அர்ப்பணிக்கிறேன்.

இங்ஙனம்,
திருமதி. **ஜாய்ஸ் கிறிஸ்டோபர்**

## படைக்கிறேன்

**அ**ன்னை வயிற்றில் என்னை தெரிந்து கொண்டீர் !
**ஆ**னந்த தைலத்தால் அபிஷேகித்தீர் !
**இ**வ்வுலக அழிவினின்று என்னை மீட்டெடுத்தீர் !
**ஈ**டற்ற உம் ஊழியத்தில் என்னை கொண்டு வைத்தீர் !

**உ**வகையால் என்னை நிறைத்து !
**ஊ**க்கமுடன் உம் சேவை செய்ய அழைத்து !
**எ**ன்னில்லா நன்மைகள் எனக்களித்து !
**ஏ**ற்றமிகு வாழ்வினை கொடுத்தீர் ஸ்தோத்திரம் !

**ஐ**யமுடன் வாழும் மக்கள் உம்மை பெற்றிட !
**ஒ**ப்பற்ற உம் நாமத்தை உலகிற்கு அறிவித்திட !
**ஓ**டியே உம் சேவை நானும் செய்திட !
**ஔ**ஷதமாய் உம் வார்த்தை எனக்கு தந்தீர் - ஆகவே
இஃதிணை படைக்கிறேன் நின் பாதம்.

இவண்

**ஜாய்ஸ் கிறிஸ்டோபர்**

## உள்ளடக்கம்

**அதிகாரம்**


**1. பூர்வத்திலுள்ள ஸ்திரீகள் – ஓர் அறிமுகம்**

**2. சாராள் – உலகத்திற்கு ராணி**

**3. ரெபெக்காள்**

**4. தெபொராள்**

**5. அபிகாயில்**

# 1

# பூர்வத்திலுள்ள ஸ்திரீகள் ஓர் அறிமுகம்

ஒரு முறை இரயில் நிலையத்தில் பயணச் சீட்டு பெற கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்று அங்கே வந்தது. கூட்டத்தைக் கண்ட குடும்ப தலைவர் அதிர்ந்து போனார். அவர் ஞானமாய் தனது மனைவியை அழைத்து நீ போய் பயணச் சீட்டை வாங்கு என்றார். அங்கே பெண்களுக்கு தனி வரிசை. இந்த பெண் போன உடனே டிக்கெட் கிடைத்துவிட்டது. அவர்கள் குடும்பமாய் இரயிலை நோக்கி புறப்பட ஆரம்பித்து விட்டார்கள்.

இங்கே தான் என் சிந்தையில் சுரீர் என்று ஒன்றுபட்டது. அநேக ஆண்கள் கூட்டத்தில் முன்டியடித்துக் கொண்டிருக்க பெண்களுக்கு தனி இடம் என்பதாலே இந்த பெண் தன் முழு குடும்பத்திற்கும் மிக சுலபமாய், சீக்கிரமாய் பயணச் சீட்டை பெற்றுவிட்டாள். இரயில் நிலையத்தில் இந்திய அரசாங்கம் பெண்களுக்கு தனி இடத்தைக் கொடுக்கிறது.

பேருந்துகளில் பெண்களுக்கு தனி இடம் இருக்கிறது, தேர்தல் களத்தில் பெண்களுக்கு என்று தனி தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றது. இவைகளையெல்லாம் நமது அரசாங்கம் செய்வதினாலே பெண்கள் சில இடங்களில்



பயன்படுகிறார்கள். நமது வேதமோ பெண்களுக்கு தனி இடத்தையல்ல தன்னிகறற்ற இடத்தைக் கொடுக்கிறது. தனி இடத்தைப் பெற்றவர்களே பயன்படுவார்கள் என்றால் தன்னிகறற்ற விசேஷித்த இடத்தை இரட்சிப்பின் நிமித்தம் பெற்றிருக்கும் நீங்கள் பயன்படுவோர்கள் மாத்திரமல்ல பிரகாசிப்பவர்களும் அல்லேலூயா !

இதை வாசிக்கும் நீங்கள் இதுவரையில் பயன்படாமலோ, பிரகாசிக்காமலோ இருந்திருக்கலாம், என் வாழ்க்கை பகட்டுகாயைப் போல ஆகிவிட்டது என்று நீங்கள் யோசிக்கலாம், பரிகாசத்திற்கு உள்ளானேன் என்று உங்கள் இதயம் குமுறலாம்.

ஆனால் உங்களை இரட்சித்த உங்கள் ஆண்டவர் உங்கள் கரத்தைப் பிடித்து சொல்லும் ஒரு வார்த்தை ''நீ பிரகாசிப்பாய்'' இதை அப்படியே விசுவாசியுங்கள் உங்கள் வாழ்வின் அனுபவமாக மாற்ற இயேசு உண்மையுள்ளவர்.

நமது ஆண்டவர் பூர்வத்திலிருந்து பெண்களுக்கு கொடுத்த தன்னிகறற்ற இடத்தை நாம் பார்க்கப் போகிறோம். ஆதியிலே ஆண்டவர் அனைத்தையும் சிருஷ்டித்தார். ஆனால் தன் சிருஷ்டிப்பின் நிறைவிற்கும், பூரணத்திற்கும் அடையாளமாக ஏவாளை உண்டாக்கினார். பெண் - தேவ சிருஷ்டிப்பின் மேன்மை.

தேவன் சிருஷ்டித்த எல்லா உயிரினங்களுக்கும் பெயரிடும் பெரிய வேலையை ஆதாமுக்கு கொடுத்தார் என்பது உண்மை. ஆனால் அவைகள் எல்லாவற்றையும் ஆளக்கூடிய அதிகாரத்தை அவர்கள் இருவரும் சேர்ந்திருந்த போதே கொடுத்தார். (ஆதி 1:28) பெண் அதிகாரமுடைய வள். பலுகி பெருகி பூமியை நிரப்புகள் என்ற ஆசீர்வாத வாக்குத்தத்ததை அவர்கள் இருவரும் சேர்ந்திருந்த பொழுதே ஆண்டவர் கொடுத்தார் பெண் - வாக்குத்தத்ததின் பங்காளி.

சரீரம் செத்த போதும் குமாரனாகிய ஈசாக்கை பெற்றெடுத்த சாராள் - **விசுவாச வீராங்கனை.** ஆண்கள் எல்லோரும் அமைதியாயிருக்க தீர்க்கத்தரிசன ஆவியினால் நிரம்பி தேவ திட்டத்தை சபையார் தீவிரமாய் நிறைவேற்ற துணைபுரிந்த **துணிச்சல்** மிக்க தெபொராள்.

மோசே ஆசரிப்பு கூடாரத்தை குறித்த தேவ திட்டத்தை சொல்லும் பொழுது **மனபூர்வமுள்ள ஸ்திரீகள்** தங்கள் ஆபரணங்களை கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. **கொடுக்கும் குணம்** படைத்தவர்கள் பெண்கள், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வருவதைக் குறித்து பரலோகத்தின் நேரடிச் செய்தியை முதன் முதலில் பெற்றுக் கொண்டது கன்னிப் பெண்ணாகிய மரியாள் தான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கினபொழுது அவர் அருகே நின்றுக்கொண்டிருந்த பிரதானமானவர்கள் பெண்களே. உயிர்த்தெழுந்த இயேசுவை முதன்முதலில் சந்தித்ததும், உயிர்தெழுதலின் செய்தியை முதன் முதலில் உலகிற்கு கொண்டு போனதும் பெண்ணே.

ஆஹா! சிருஷ்டிப்பு முதற்கொண்டு சிலுவையின் செய்திவரை பெண்களின் தன்னிகறற்ற பண்பு நமக்கு தெளிவாகிறது அல்லவா! உண்மையிலேயே தேவனின் திட்டத்தில் விசேஷ இடம் உங்களுக்கும் உண்டு. இந்த பூர்வத்திலிருந்த பெண்களுக்கு உள்ளே புதைந்து கிடந்த சீரியப் பண்புகளை தியானிக்கும் பொழுது நாமும் சாதனையாளராக மாறுவோம் என்பதில் சந்தேகம் இல்லை. வாருங்கள் சிலவற்றை தியானிப்போம். (இப்படியே தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும்.... தங்களை அலங்கரித்தார்கள் 1பேதுரு 3:5)

# 2

# சாராள் - உலகத்திற்கு ராணி

ஆபிரகாமை தேவனாகிய கர்த்தர் அழைத்தபோது அவரோடு கூட சாராளும் விசுவாச பாதையில் கால் எடுத்து வைக்கிறாள். ஆனால் சாராளாக அல்ல சாராயாக, சாராய் என்றால் என் ராணி என்று அர்த்தம். ஏறத்தாழ 25 ஆண்டுகள் தேவன் கொடுத்த விசுவாச பாதையில் சாராய் பயணப்படுகிறார் இடைஇடையே சில தடுமாற்றங்கள் வந்தது உண்மைதான்.

அந்த விசுவாச தடுமாற்றத்தினால் தேவன் அவளை தள்ளிவிடவில்லை. மாறாக தம் வார்த்தைகளால் தட்டிக்கொடுத்து நடத்திக் கொண்டே வந்தார். இப்பொழுது தேவன் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறும் வேளை வந்துவிட்டது. சாராயிக்கு 90-வயது, கர்த்தர் இனி அவள் சாராய் அல்ல, உலகத்திற்கே ஆசீர்வாதமாய் இருக்கும்படி சாராள் என்று அழைக்கப்படுவாளாக என்று சொல்லுகிறார். சாராள் என்றால் உலகத்திற்கு ராணி.

இங்கே ஒன்றை அழுத்தமாக சொல்ல விரும்புகிறேன். விசுவாச பாதையின் ஆரம்பத்தில் ஒரு மனிதனுக்கு ஆசீர்வாதமாய் இருந்தவள், தன் விசுவாச ஜீவியத்தின் முடிவில் உலகத்திற்கே ஆசீர்வாதமாய் மாறிவிட்டாள். உங்கள் ஆரம்பம் அற்பமானதாக இருக்கலாம், கவலைப்படாதிருங்கள்! உங்கள்

முடிவை சம்பூரணமாய் மாற்ற வல்லவர் உங்களோடு இருக்கிறார்.

இதுவரைக்கும் ஒரு சிலருக்கு நீங்கள் பயன்பட்டிருக்கலாம், ஏன் ஒருவருக்கும் கூட பயன்படாமல் இருந்திருக்காலம். உங்கள் ஜீவிய பாதையின் முடிவில் ஒரு பெரும் திரள்கூட்டத்திற்கு உங்களை ஆசீர்வாதமாக மாற்ற உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

உங்கள் தற்கால நிலையைப் பார்த்து துவண்டு போகாதிருங்கள், உங்கள் விசுவாச பாதையில் உறுதியாய் நில்லுங்கள். உங்களை அழைத்த தேவன் உங்களை கனப்படுத்தும் நாள் வெகுதூரத்தில் இல்லை, மிக சமீபத்தில் இருக்கிறது.

சாராயை இனி சாராள் என்று தேவன் சொல்லும் பொழுது இவளுக்கு 90-வயது. ஏறத்தாழ 25-ஆண்டுகள் தன் ஊரைவீட்டு வெளியே வந்தாகிவிட்டது. இதுவரைக்கும் பிள்ளை ஏதும் இல்லை. இனி நாம் தேவ வாக்குத்தத்தமாகிய ஈசாக்கை பெறுவோம் என்ற நம்பிக்கை இருவருக்குமே இல்லை. ஆனால் கர்த்தரின் அற்புத கிரியை அப்பொழுதான் துவங்கியது.

சில சமயம் நம்முடைய வாழ்க்கையில் வயதாகிவிட்டபடியால் இதற்கு மேல் நாம் பயன்பட முடியாது என்ற முடிவிற்கு நாம் வந்து விடுகிறோம். ஆனால் தேவன் ஒரு மனிதனை பயன்படுத்துவற்கு வயது ஒரு தடையில்லை. 90- வயது நிரம்பின சாராளையும் அவருக்கு பயன்படுத்த தெரியும், 5 அப்பம் 2 மீன் கொண்டுவந்த பெயர் சொல்லப்படாத சிறுவனையும் அவரால் பயன்படுத்த முடியும்.

எனவே, எனக்கு அன்பானவர்களே! தேவன் உங்களை ஆசீர்வதிப்பதற்கு உங்கள் வயது ஒரு தடையில்லை ஆகவே



ஆயத்தமாகுங்கள். ஆசீர்வாதத்தைப் பெறுங்கள். அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருங்கள்.

என் விசுவாச பாதையில் பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. என் ஊழிய பாதையில் பல ஆண்டுகளை கடந்து விட்டேன், என் குடும்ப வாழ்க்கையில் நாட்கள் கழிந்து போய் விட்டன. ஆனால், நான் எதிர்ப்பார்த்த எவ்வித மாற்றமும் இல்லை, முன்னேற்றமும் இல்லை, அதற்கான அறிகுறிகள் கூட இல்லை என்று உங்கள் இதயம் குமுறலாம்.

கர்த்தரை நம்பித்தான் என் வாழ்க்கையை ஆரம்பித்தேன், அவர் மேல் உள்ள விசுவாசத்தினால் தான் இந்த ஊழியத்தில் களம் இறங்கினேன். பின்னே ஏன்? எனக்கு இந்த நிலை என்று நீங்கள் கண்ணீரோடு கேட்கலாம். இதே சூழ்நிலைதான் சாராளின் வாழ்க்கைக்குள்ளே என்னால் பார்க்க முடிகிறது.

பல ஆண்டுகள் அவள் வாழ்க்கையிலே இருந்த போராட்டம் வெற்றியாய் மாற்றப்பட்டது. வாக்குத்தத்தின் சுதந்தரவாளியாகிய ஈசாக்கை பெற்றெடுத்து தன் கரத்தில் ஏந்தினாள். காரணம் வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவர்.

இதே ஆண்டவர் தான் உங்கள் ஆண்டவர். நீண்ட நாள் உங்கள் எதிர்ப்பார்ப்பு, பல ஆண்டுகளாக உங்களுக்கு இருந்த ஏக்கம் இவைகளை தேவன் தீர்த்து வைக்கும் நாள் நெருங்கிவிட்டது. உங்கள் இதயம் துள்ளி கர்த்தரை துதிக்கட்டும், உங்கள் வாழ்க்கை தேவனுடைய அற்புதத்தை சுதந்தரிக்கட்டும்.

பல ஆண்டுகளாய் ஊழியத்தில் நீங்கள் பட்ட பிரயாசம், உங்கள் குடும்ப வாழ்க்கையில் நீங்கள் காட்டின பொறுமை

இவை எல்லாவற்றிற்கும் ஏற்ற பலன் உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதை வாசிக்கும் சிலருக்கு பிரத்தியட்சயமாய் சொல்லுகிறேன்; நன்மைகள் உங்கள் வாசல் கதவை தட்டும் நேரம் இது. நன்மையும் கிருபையும் உங்களை தொடரும் நாள் இது. இப்பொழுதே உள்ளங்கை மேகத்தை நீங்கள் காண ஆரம்பிப்பீர்கள். பெருமழையின் சத்தம் உங்கள் காதுகளில் கேட்கவில்லையா?

இன்னும் கொஞ்ச நாளில் இந்த ஆசீர்வாத மழை உங்களை நனைக்கும், உங்கள் வறண்ட வாழ்க்கை செழிப்பாக மாற்றப்படும். நீங்கள் நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பீர்கள். உங்களை ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றுகிறவர் உங்களோடு கூட இருக்கிறார். வாருங்கள்! உள்ளே போவோம், இந்த சாராளின் வாழ்க்கையைப் பார்க்க.

சாராளின் வாழ்வில் ஆண்டவர் செய்த அற்புதங்களை பார்க்கும் அதே வேளையில், சாராளுக்குள் இருந்த நற்பண்புகளில் சிலவற்றை ஆவியானவர் என் கண்களில் பளிச்சென்று காட்டினார். அவைகளை நீங்களும் கண்டு பயன்பெற இங்கே எழுதுகிறேன்.

**1. விசுவாசமுள்ள சாராள் :**

''விசுவாசத்தினாலே சாராளும், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்'' (எபிரெயர் 11:11). வேதம் சொல்லும் வார்த்தையைக் கவனித்தீர்களா!

''விசுவாசத்தினாலே சாராள் பிள்ளை பெற்றாள்'', ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்பதை நாம்



எல்லோரும் நன்கு அறிவோம். ஆதலால் விசுவாச வீரர்களின் பட்டியலில் ஆபிரகாமின் பெயர் வருவது ஆச்சரியத்திற் குரியது அல்ல. ஆனால் விசுவாச வீரர்களின் பட்டியலில் சாராளின் பெயர் குறிப்பிடப்படுவது உண்மையிலே என் உள்ளத்தை களிக்கூறப்பண்ணுகிறது. இந்த இடத்தில் சாராளின் பெயர் குறிப்பிடப்படுவதற்கு சாராளுக்குள்ளே தான் எத்தனை போராட்டங்கள். இருப்பினும் கர்த்தர் சாராளுக்கு துணைநின்று அவள் விசுவாசத்தை பெருக செய்து விசுவாசிக்கிற நமக்கு முன்னோடியாக மாற்றிவிட்டார்.

சாராளுக்குள் வந்த போராட்டங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். (ஆதி 16:2)

(i) பல ஆண்டுகள் ஆபிரகாமுடன் வாழ்ந்தும், தான் பிள்ளை பெறாததை உணர்ந்து விரக்தியடைந்த சாராள் சொன்ன வார்த்தையைக் கவனியுங்கள். ''கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; அவளாலே (ஆகாராலே) ஒரு வேளை என் வீடு கட்டப்படும்''. விசுவாச வாழ்க்கையில் சோர்வு அடைந்த சாராள் எடுத்த தவறான முடிவு இது.

(ii) (ஆதி 18:11) ''ஆபிரகாமும் சாராளும் வயது சென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்று போயிற்று''. இயற்கையும் விஞ்ஞானமும் சாராளின் விசுவாச வாழ்க்கையின் எதிர் திசையில் நிற்பதை இங்கே நம்மால் காணமுடிகிறது.

(iii) (ஆதி 18:12) ''ஆகையால், சாராள் தன் உள்ளத்திலே நகைத்து : நான் கிழவியும், என் ஆண்டவர் முதிர்ந்த வயதுள்ளவருமான பின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ என்றாள்''.

முதிர் வயதாயிருக்கும் சாராள் இயற்கையை அறிந்தவள்,

விஞ்ஞானத்தை அறிந்தவள், சமகாலத்து வாழ்க்கை நெறிகளை அறிந்தவள். இவைகளெல்லாம் அவர்கள் உள்ளத்தை நிரப்பியிருக்க; இப்பொழுது கர்த்தர் பிள்ளை பெறுவாய் என்று சொன்ன போது தன் உள்ளத்திலே நகைத்தார்கள். இதின் அர்த்தம், அனுபவம் எல்லாம் உள்ளத்தில் இருக்கிறதினாலே. அந்த அனுபவம் சில சமயங்களில் தேவனுடைய வார்த்தைக்கு எதிராய் போராடுகிறது. சாராளின் விசுவாச ஜீவியத்தில் இந்த மூன்று வகையான போராட்டத்தை நம்மால் பார்க்க முடிகிறது.

★ அவசர முடிவு

★ இயற்கை, விஞ்ஞானம்

★ அனுபவம்

இவைகள் சாராளின் விசுவாச வாழ்க்கையில் சில தடுமாற்றங்களைக் கொண்டு வந்தாலும், விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய கர்த்தர் அவளை விசுவாச வீராங்கனையாக மாற்றிவிட்டார். எனக்கு அருமையானவர்களே! அவசர முடிவை எடுக்காதிருங்கள்.

விசுவாசம் நமக்கு பொறுமையை கற்பிக்கும் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே நிதானமாய் தேவ சித்தத்தை அறிந்து செயல்படுங்கள். சில சமயங்களில் இயற்கையும், உலக நிகழ்வுகளும், விஞ்ஞானமும், அனுபவமும் நம்முடைய விசுவாச வாழ்க்கையின் சீரை கெடுக்கலாம். ஆகவே இவை எல்லாவற்றை விடவும், கர்த்தரின் வார்த்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்போமாக.

ஒருவேளை உங்கள் அவசர முடிவினாலே அல்லது வேறு சில தப்பிதங்களாலே உங்கள் விசுவாச வாழ்க்கை தடுமாறியிருக்கலாம். அதனால் மனம் துவண்டு



போகாதிருங்கள். தடுமாற்றம்தான் வந்ததே தவிற நீங்கள் தடம் மாறவில்லை;அதற்காய் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.

உங்கள் விசுவாச வாழ்க்கையில் நேர்பாதையில் பயனப்பட கர்த்தரின் ஒத்தாசையைச் சார்ந்து கொள்ளுங்கள். இங்கே உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல என் உள்ளம் உந்தப்படுகிறது. அந்த வார்த்தை பேதுருவை பார்த்து இயேசு சொன்ன வார்த்தை ''சாத்தான் உன்னை கோதுமையை சுளகினால் புடைப்பது போல புடைக்க அனுமதி கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்''. (லூக்கா 22:31,32)

எத்தனை அருமையான வார்த்தை நம்முடைய விசுவாச வாழ்க்கையில் சாத்தானாலோ, மனிதர்களாலோ, நம்மாலோ தடைகள் உண்டாகலாம். ஆனால் நம்முடைய விசுவாசம் அழியாமல் இருக்க நமக்காக வேண்டுதல் செய்யும் கல்வாரி நாயகன் நம்மோடிருக்கிறார்.

கவலையை விடுங்கள். உங்கள் விசுவாச வாழ்க்கை வெற்றி வாழ்க்கையாக அமையும். இத்தனை போராட்டங்கள் சாராளின் வாழ்க்கையில் இருந்த போதும், சில தப்பிதங்கள் அவளின் வாழ்க்கையில் இடம் பெற்ற போதும் கர்த்தரை பற்றிக் கொண்டபடியால் புதிய ஏற்பாட்டில் தப்பிதங்களை தள்ளிவிட்டு விசுவாச வீரர்களின் பட்டியலில் சாராளின் பெயரை கர்த்தர் இணைத்து விட்டார்.

இதே தான் உங்களுக்கும், உங்கள் கடந்த கால வாழ்க்கையின் தப்பிதங்களை நினைக்க வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது கர்த்தரை பற்றிக் கொண்டால் அதுவே போதுமானது. உங்கள் வாழ்க்கையின் முடிவில் உங்கள் தப்பிதங்களை கர்த்தர் மறைத்து, தமது மகிமையை உங்கள்

வாழ்க்கையில் பெருக செய்வார். கர்த்தரின் மகிமை உங்கள்மேல் உதிக்கும் விசுவாச வீராங்கனைகளே உங்களுக்கு எமது வந்தனங்கள்.

**2. கணவரை கனம் பண்ணும் சாராள் :**

''அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி''...(I பேதுரு 3:6). சாராள் தன் கணவரை கனப்படுத்தும் விதம் இந்த ஒரே வார்த்தையில் நமக்கு பளிச்சென்றுபடுகிறது. எத்தனை கனம் உள்ள வார்த்தை பார்த்தீர்களா!

நாம் எத்தனை தான் பெரியவர்களாகவும், பிரகாசிப்பவர்களாகவும் இருந்தாலும் நமது சொந்த புருஷரை கனப்படுத்த தெரியவில்லை என்று சொன்னால் நம்முடைய ஜீவியத்தின் முடிவு பரிதாபமே. கோபித்து கொள்ளாதிருங்கள்! தேவன் நமக்கு பூமியில் கொடுத்திருக்கும், நமது கண்முன் இருக்கும் மணவாளனை கனப்படுத்த முடியாவிட்டால் நாம் காணும்படி காத்திருக்கும் மணவாளனாகிய கிறிஸ்து இயேசுவை கனப்படுத்துவோம் என்பது எப்படி நிச்சயமாகும்.

ஒரு முறை என் மகன் சொன்ன சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. அது ஒரு திருமண நிகழ்ச்சி. அப்பொழுது பிரசங்கியார் இந்த வார்த்தையை எடுத்து சாராளைப் போல தன் கணவனை ஆண்டவனே! என்று கூப்பிடுவது எத்தனை பேர்? என்று கேட்டார்.

அப்பொழுது ஒரு அம்மா அருகில் இருந்தவர்களைப் பார்த்து சொன்னார்களாம்...ம்ம்ம்...அவனே! என்று சொல்லாமல் இருந்தால் போதாதா ஆண்டவனே என்றுவேற சொல்ல வேண்டுமா? சிரிக்காதீர்கள்!! ஆவிக்குரிய உலகத்தில் சில இடங்களில் இப்படி நடைப்பெற்று



கொண்டுதான் இருக்கிறது. நாமோ இப்படி செய்யாதிருப்போமாக!

சில இடங்களில் கணவன் பெயரை கூட மனைவிமார்கள் சொல்ல பயப்படுவார்கள். ஒரு முறை அரசாங்க கணக்கெடுப்பிற்காக கிராமத்திற்குள் குழு ஒன்று வீடுவீடாக சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது ஒரு வீட்டில் இருந்த அம்மாவிடம் அந்த குழு கேட்ட எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லப்பட்டது. கணவர் பெயரை மாத்திரம் சொல்லவில்லை.

இவர்கள் திரும்ப திரும்ப அதைக் கேட்க அந்த அம்மா செய்கையை கண்பிக்கிறார்கள். விரல்களால் 6-என்ற எண்ணையும் முகத்தையும் காண்பிக்க, இவர்கள் ஆறுமுகமா என்று கேட்க அதேதான் என்று அந்த அம்மா ஆமாம் போட்டார்கள். இந்த காலத்தில் கணவன் பெயரை சொல்ல தயங்கும் பெண்ணா! என்று ஆச்சரியப்பட்ட அந்த குழு அவர்களிடமே, ஏமா! கணவர் பெயரை சொல்ல இவ்வளவு பக்தியா என்று கேட்டுவிட்டது.

அதற்கு அந்த அம்மா என்ன சொன்னார்கள் தெரியுமா? அதெல்லாம் ஒன்றுமில்லை அந்த கருமத்த யாரு சொல்லுவா. பார்த்தீர்களா, பதிலை உங்களைப் போலவே அந்த குழுவும் ஆடி போய் விட்டது. நான் ஏன் இதை இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் கணவர் பெயரை சொல்லுவதோ, சொல்லாமல் இருப்பதோ பெரிய விஷயம் அல்ல, உங்கள் கணவரை கனமாய் எண்ணுவதும் கவுரவமாய் மற்றவர்கள் முன்பு அவரை பற்றி பேசுவதும் தான் முக்கியம்.

**3. கீழ்ப்படிதலுள்ள சாராள்**

''அந்தப்படியே சாராள்...அவனுக்கு (ஆபிரகாமுக்கு) கீழ்ப்படிந்திருந்தாள்'' (I பேதுரு 3:6) சாராள் தன் கணவனை

கனம்பண்ணினது மாத்திரமல்ல கீழ்படிந்திருந்தாள் என்று வேதம் சொல்லுகிறது. இதை சிந்தித்த போது என் கண்களில் பளிச்சென்று ஒரு வசனம் பட்டது. அதை இங்கு குறிப்பிடுகிறேன் பாருங்கள், ''ஆதி 21:10... ''ஆதலால் சாராள் உனக்கு சொல்வதெல்லாவற்றையும் கேள்.'' ஈசாக்கு பால் மறந்த நாளில் நடந்த சம்பவத்தின் நிமித்தம் சாராள் இஸ்மவேலைக் குறித்து அவன் சுதந்தரவாளியல்ல அவனை புறம்பே தள்ளு என்கிறாள். இந்த வார்த்தை ஆபிரகாமுக்கு துக்கமாயிருந்தது.

அந்த சமயத்தில் தான் கர்த்தர் சொன்ன வார்த்தை ''எல்லாவற்றையும் கேள்'' ஒன்றல்ல இரண்டல்ல அத்தனையையும் கேட்க வேண்டுமாம். இந்த வார்த்தையின்படி பார்த்தால் ஆபிரகாம் சாராளுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்திருந்தார் என்று தான் வேதம் பதிவு செய்திருக்க வேண்டும்.

ஆனால் சாராள் கீழ்படிந்திருந்தார் என்று ஆவியானவர் அழுத்தமாய் பதிவு செய்திருப்பது எத்தனை ஆச்சயரித்தை கொடுக்கிறது. இதுவே நம்முடைய குடும்பத்தில் கர்த்தர் இப்படி சொல்வாரானால் நம்மில் சிலர் இதுதான் சாக்கு என்று கணவரை வளைத்து நிமிர்த்தியிருப்போம், கோபித்துக் கொள்ளாதீர்கள்!

நான் உங்களை சொல்ல வரவில்லை. நம்மில் சிலர் என்று தானே சொன்னேன். சரி போகட்டும், சாராளை பாருங்கள்! அந்த ஒரு விஷயத்தில் மட்டும் தன் உரிமையை சற்று கையில் எடுத்தாலும் தன் கணவருக்கு கீழ்படிவதில் கிஞ்சிற்றும் குறையவில்லை.

சிலர் கணவருக்கு கீழ்படிவதை அலர்ஜி போல எண்ணுகிறார்கள். ஒரு காரியத்தில் கீழ்படிந்தால்



எல்லாவற்றிலும் நம்மை அடிமையாக்கிவிடுவார் என்ற பயம், கணவரை கைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் யாரோ சொல்லிக் கொடுத்ததை வைத்துக் கொண்டு கீழ்படிதலைக் குறித்து மிகவும் யோசிக்கிறார்கள். முழுவசனத்தையும் எடுத்து வாசித்துப் பாருங்கள்... சாராள் கீழ்படிந்திருந்தாள், நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்திற்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்கு பிள்ளைகளாய் இருப்பீர்கள். நம்முடைய பயத்திற்கு பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

ஆகவே கீழ்படிந்தால் அடிமைத்தனம் என்றும் ஆபத்தில் சிக்கிக்கொள்வோம் என்றும் பயப்படாதிருங்கள்! அப்படியெல்லாம் ஒன்றும் ஆகாது. நீங்கள் நன்மையை தானே செய்கிறீர்கள். ஆகவே பயப்படாமலும் இருங்கள் அப்பொழுது சாராளுக்கு பிள்ளைகளாயிருப்பீர்கள். ''நன்மை செய்தால் மேன்மை இல்லையோ''? என்று சொன்ன ஆண்டவர் நீங்கள் செய்யும் நன்மைக்கேற்ற மேன்மையை உங்களுக்கு கொடுப்பார். கணவருக்கு கீழ்படியுங்கள் மேன்மையை அனுபவியுங்கள்.

சிலருக்கு கீழ்படிதல் இருக்கும் ஆனால் அது சரிவர இருக்காது (I பேதுரு 3:1) சொல்வதைக் கவனியுங்கள். ''அந்தபடி மனைவிகளே **உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படிந்திருங்கள்''.** இப்பொது நீங்களே ஏன் சரிவர இருக்காது என்று புரிந்துக் கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன், அது என்ன தெரியுமா?

சிலர் கீழ்படிவார்கள் ஆனால் அக்கா புருஷருக்கும், தங்கச்சிக்கு புருஷருக்கும் தான். சொந்த புருஷனை அம்போ என்று விட்டுவிடுவார்கள். குடும்பத்தில் ஏதாகிலும் விசேஷம் என்றால் அக்கா வீட்டுக்காரரை ஒரு வார்த்தை கேட்டுக்

கொள்கிறேன் என்பார்கள், தன் சொந்த புருஷரை சட்டைப் பண்ணமாட்டார்கள், இதை என்னவென்று சொல்வது. பிரியமான சகோதரிகளே வேதம் சொல்வதைக் கவனியுங்கள். **''உங்கள் சொந்த புருஷருக்கு''** இந்த பதத்தை அப்போஸ்தலானாகிய பவுல் (எபேசியர் 5:24-ல்) பயன்படுத்துகிறார். உங்கள் சொந்த புருஷருக்கு இதைக் கோர்த்துப் பார்க்கும்போது இந்த பிரச்சனை அப்பொழுதிலிருந்து இருக்கும் போல தான் தெரிகிறது. சிரிக்காதீங்க! கொஞ்சம் சீரியஸ் மேட்டர் தான் இது.

ஒரு முறை கவிஞர் வைரமுத்துவின் மனைவிக்கு ஒரு தொலைப்பேசி அழைப்பு. அது என்னவென்றால் பெண்கள் விடுதலை பிரச்சாரத்திற்காக ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்கிறோம். அதில் நீங்கள் வந்து பெண் விடுதலைப் பற்றி சிறப்பு உரையாற்ற வேண்டும் தேதி கொடுங்கள். அதற்கு அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா? சற்று நேரம் கழித்து அழையுங்கள், என் கணவரிடம் கேட்டு சொல்கிறேன்.

போகபோவது பெண் விடுதலை பற்றி பேச, ஆனால் அதற்கும் தன் கணவரிடம் அனுமதி கேட்டு செல்லும் அந்த பெண்மணியின் குணத்தைப் பார்த்தீர்களா! இதிலிருந்து கணவருக்குக் கீழ்படிவது அடிமைத்தனம் இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். ஒரு உலக பெண்ணே கணவருக்கு இந்த அளவுக்கு கீழ்படிவார்களானால், உன்னதமான தேவனை சேவிக்கும் பெண்களாகிய நாம் எவ்வளவு அதிகமாய் கீழ்படிய வேண்டும் என்று யோசித்துப்பாருங்கள். ஒப்புக்கொடுங்கள்.

### 4. உபசரிக்கும் சாராள்

அப்பொழுது ஆபிரகாம் தீவிரமாய் கூடாரத்தில் சாராளிடத்திற்குப் போய், நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து அப்பம் சுடு என்றான். (ஆதி 18:6)



மம்ரேயின் சமபூமியிலே ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது 3 புருஷரை பார்க்கிறான். அவர்களை கண்டவுடன் அவர்களிடத்தில் ஓடி ஆண்டவரே! நீங்கள் என்னிடத்தில் இளைப்பாற வேண்டும் என்று தாழ்மையாய் கேட்கிறான். அவர்கள் சம்மதிக்க, கூடாரத்துக்குள் ஓடி சாராளுக்கு இதைச் சொல்லுகிறான். சாராள் சமைக்கிறாள். பாருங்கள்! எத்தனை அற்புதமான உபசரிக்கும் குடும்பம் கணவன் அழைக்கிறான், மனைவி சமைக்கிறாள் ! ஆபிரகாம் அவர்களை அழைத்துக் கொண்டு வந்தபோது அவர்கள் யார்? எங்கிருந்து வந்திருக்கிறார்கள்? யாரைத் தேடி வந்திருக்கிறார்கள்? என்ற கேள்வி பதில் விளையாட்டையெல்லாம் சாராள் நடத்திக் கொண்டிருக்க வில்லை.

இந்த வார்த்தையை கவனியுங்கள் தீவிரமாய், சீக்கிரமாய் கணவன் மனைவி செயல்பாட்டை கவனீத்தீர்களா! ''கணவன்-தீவிரமாய், மனைவி- சீக்கிரமாய்'' வந்திருக்கும் விருந்தினரை உபசரிக்க எத்தனை முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார்கள். வேதம் சொல்கிறது பரிசுத்தவான்களின் குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள், அந்நியரை உபசரிக்க நாடுங்கள்.

ஆகவே பரிசுத்தவான்களின் குறைவில் உதவி செய்வதையும், மற்றவரை உபசரிப்பதையும் மறவாதிருப்போமாக. இப்படி அந்நியரை உபசரிப்பதினால் சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்தார்கள் என்று வேதம் சொல்வதை நினைவில் கொள்வோமாக.

ஆபிரகாமும், சாராளும் இப்படி அவர்களை உபசரித்த போது தேவனுடைய வாக்குத்தத்ததின் உறுதியை பெற்றுக் கொண்டார்கள். (ஆதி 18:10...) (சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்). நீங்கள் மற்றவரை உபசரிக்கும் பொழுது வாக்குத்தத்ததிற்கு சமீபமாகிறீர்கள்.

இந்த தேவதூதர்கள் புறப்பட்டு போனபோது சோதோமுக்குள் நுழைந்தார்கள். அவர்களைக் கண்ட லோத்து தரைமட்டம் குனிந்து தன் வீட்டிற்கு வந்து அப்பம் புசிக்க வேண்டும் என்று வருந்திக் கேட்டுக்கொண்டான் என்று வேதம் சொல்கிறது. இதை கவனிக்கும் போது நீதிமான்கள் உபசரிக்கும் குணத்தில் சிறப்பாய் இருக்கிறார்கள் என்பது புரிகிறது அல்லவா!.

உபசரிக்கும் குணங்கள் நிறைந்திருக்கும் இந்த குடும்பம், வரப்போகும் தீங்கில் இருந்து தப்பிக்கொண்டது. அன்பானவர்களே! நீங்கள் எவ்வளவு அதிகமாய் மற்றவர்களை உபசரிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய் தீங்கிற்கு தூரமாவீர்கள்.

ரெபெக்காள் எலியேசர் தன்னிடம் தண்ணீர் கேட்ட போது மனமுவந்து உமக்கும் வார்ப்பேன் உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்று உபசரித்ததினால் ஆசீர்வாதமான எதிர்காலத்தை பெற்றுக் கொண்டாள். ஆகவே உபசரிப்பில் வளருவோம், நன்மைகளின் எதிர்காலத்தை சுகந்தரிப்போம்.

உபசரிக்கும் குணம் உடையவர்கள், உபசரிக்கும் விதத்தையும் நன்கு அறிந்தவர்களாக இருப்பார்கள்.

உபசரிக்கும் விதத்தை மேற்கூறிய சம்பவங்களிலிருந்து விவரிக்கிறேன் கவனியுங்கள்.

1) எதிர்கொண்டு ஓடி (ஆதி 18:2)

2) தரைமட்டும் குனிந்து (தாழ்த்தி) (ஆதி 18:2)

3) இன்பமாய் பேசி (ஆதி 18 : 3, 4 ,5)

4) தீவிரமாய் (ஆதி 18:6)

5) சீக்கிரமாய் (ஆதி 18:6)

6) அவர்கள் புசிக்கிறார்கள்,
ஆபிரகாம் நின்றான் (கவனித்தல்) (ஆதி 18:8)



7) வருந்தி கேட்டுக்கொண்டான் (ஆதி 19:3)

8) விசேஷ உணவு (புளிப்பில்லாத அப்பம்) (ஆதி 19:3)

9) விருந்தினரின் நன்மையில் அக்கரை செலுத்துகிறான்.

பார்த்தீர்களா! இதுதான் உபசரிப்பு. ஒருமுறை எனது கணவரின் வியாதிப்படுக்கை மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்து போகிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நிலை அந்த சமயத்தில் அநேகர் எங்களுக்கு ஆறுதலாக இருந்தார்கள், அதில் குறிப்பாக ஒரு விசுவாச குடும்பம் எங்களை ஆதரித்த, உபசரித்தவிதத்தை இன்றுவரை நாங்கள் மறக்கவில்லை. மேற்சொன்ன அத்தனைக் குறிப்புகளையும் அந்தக் குடும்பத்திற்குள் கண்டேன். இப்படிப்பட்ட குடும்பங்கள் நமது கிறிஸ்தவத்திற்குள் இருப்பதால் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தாவே உம்முடைய பிள்ளைகளை இப்படிப்பட்ட குணாளர்களாக மாற்றுவீராக. இதையெல்லாம் விட்டுவிட்டு சிலர் உபசரிப்பு என்றபெயரில் புது டிசைன் புடைவையைக் கட்டிக்கொண்டு புடவைக்கடை விளம்பர பொம்மையைப் போல ஆடாமல், அசையாமல் சிரிக்காமல், பேசாமல் இருப்பார்கள். முக்கியமாக புடவையின் மடிப்பு கலையாமல் பார்த்துக்கொள்வார்கள்.

பிரியமானவர்களே! வேதம் சொல்லும் உபசரிக்கும் தன்மை நமக்குள் இருக்கட்டும். அப்போது

1) வாக்குத்தத்தத்திற்கு சமீபமாவோம்.

2) தீமைக்கு தூரமாவோம்.

3) ஆசீர்வாதமான எதிர்காலத்தை அடைவோம் இதற்கு தேவனாகிய கர்த்தர் கிருபை செய்வராக.

# 3

# ரெபெக்காள்

ரெபெக்காள் யார் என்று கேட்டாள். கண்ணை மூடிக்கொண்டு பளிச்சென்று ஈசாக்கின் மனைவி என்று ஏறத்தாழ நம்மில் எல்லாரும் சொல்லிவிடுவோம். ரெபெக்காள் என்ற பெயரின் அர்த்தம் தெரியுமா? அர்த்தம் - சுருக்கு கயிறு. அது என்ன சுருக்கு கயிறு என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது. எளிமையாக சொல்கிறேன் கேளுங்கள்.

கிராமத்து பெண்கள் சிலர் சுருக்கு பை வைத்திருப்பார்கள். தங்கள் பணத்தை அந்த சுருக்கு பைக்குள் போட்டு சுருக்கு பையை இருக்கி விட்டால் அந்த பை தலைகீழாக விழுந்தாலும் பணம் சிதறி போகாது பத்திரமாய், பாதுகாப்பாய் இருக்கும். இதே வேலை தான் சுருக்கு கயிறுக்கும் எந்த ஒரு வலுமையான பொருளை தூக்கும்பொழுதும் அந்த கயிறின் நுணியில் ஒரு சுருக்கு போடுவார்கள். அப்பொழுது தான் அந்த வலுவான பொருளை எளிதாய் தூக்க முடியும். இந்த கயிற்றில் போடப்படும் சுருக்குக்கு பெயர் தான் சுருக்கு கயிறு.

ரெபெக்காள் பெயரின் அர்த்தம் மாத்திரம் அல்ல. அவள் வாழ்க்கையில் குணமும் சுருக்கு கயிறாகவேதான் இருந்திருக்கிறது. சிலருக்கு பெயர் சமாதானம் என்று இருக்கும், ஆனால் வாழ்க்கையே சமாதானம் இல்லாமல் இருக்கும்.



சிலருக்கு பெயர் அறிவழகன் என்று இருக்கும் உண்மை வாழ்விலோ அறிவுக்கும் அவருக்கும் வெகுதூரம் இருக்கும். ஆனால் ரெபெக்காளுக்காய் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். தன் கணவர் வயது முதிர்ந்த காலத்தில் தம் பிள்ளைகளை ஆசீர்வதிப்பதில் தடுமாறும்போது, தடம் மாறும் போது தேவனின் தீர்க்கதரிசனம் சரியாய் குடும்பத்திற்குள் நடைபெறும் படிக்கு குடும்பத்தை நகர்த்தின சுருக்கு கயிறு இவள்.

பிள்ளைகள் ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் எழும்பின போது இருவருக்கும் இடையே நின்று இந்த ஜென்ம பகையை ஞானமாய் நகர்த்திவிட்ட சுருக்கு கயிறு இவள். வாருங்கள் உள்ளே சென்று இன்னும் பல நற்குணங்களை இந்த ரெபெக்காளின் வாழ்க்கையில் காண்போம்.

### 1) பணிவிடை ஆவியை உள்ளவள்

ரெபெக்காளை குறித்து வாசிக்கும் பொழுது (ஆதி 24:15) அவள் தன் குடத்தை தோல் மீது வைத்துக் கொண்டு வந்தாள் என்று வாசிக்கிறோம். அவள் தன் தகப்பன் வீட்டில் இருக்கும் போதே சுறுசுறுப்பாய் வேலைகளை செய்திருக்கிறாள். இந்த வேலை செய்யும் ஆவியை உடைய பெண்ணை கர்த்தர் தமது தாசனாகிய ஈசாக்கிற்கு என்று நியமித்திருந்தார்.

ஆகவே தான் எலியேசர் ஜெபித்த போது பதில் தரும்படி வேறு எந்த பெண்ணையும் கர்த்தர் வரவொட்டாமல் ரெபெக்காளை கொண்டு வந்தார். அது மாத்திரமா இந்த எலியேசர் வைத்த Test-யை பாருங்கள். (ஆதி 24:14).

நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும்போது குடி என்றும், உன் ஒட்டகங்களுக்கு குடிக்கும்படி வார்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு

நியமித்தவளாயிருக்கவும். என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்றும் நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான். அப்பப்பா எப்பேர் பட்ட ஜெபம்! ஒட்டகங்களுக்கு தண்ணீர் வார்ப்பது என்றால் சும்மாவா. ஆனால் இந்த ரெபெக்காள் பணிவிடை ஆவியோடு கூட எலியேசரிடம் பேசினது மாத்திரமல்ல சுறுசுறுப்பாய் தான் சொன்னதையும் நிறைவேற்றிருக்கிறாள்.

இங்கே ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளை இளம் வயதிலிருந்து வேலைகளை செய்ய மெதுவாய் பழக்குவியுங்கள். அப்பொழுது எதிர்காலத்தில் அவர்கள் ஆசீர்வாதமுள்ளவர்களாய் திகழ்வார்கள்.

அதைவிட்டுவிட்டு பல ஆண்டு கழித்து பிறந்த பிள்ளை இது, என் தாயை போலவே இருக்கும் பிள்ளை இது என்று சாக்குகளை சொல்லி பிள்ளைகளை பணிவிடையில் பழக்குவிக்காமல் விட்டுவிடுகிறீர்கள் என்றால் அவர்களின் பிரகாசமான எதிர்காலத்திற்கு நீங்கள் முட்டுக்கட்டை ஆகிவிடுகிறீர்கள். நீங்கள் முட்டுக்கட்டையாக அல்ல உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாய் இருக்கும்படி இதனை ஜெபத்தோடு எழுதுகிறேன்.

வாலிப பிள்ளைகளே! குடும்பத்தில் உங்களுக்கு இருக்கும் வேலைகளை சங்கடத்தோடு செய்யாதீர்கள், சந்தோஷத்தோடு செய்யுங்கள். அது உங்கள் எதிர்கால வாழ்க்கையை பிரகாசமாக்கும்.

ஒரு வேளை தேவனாகிய கர்த்தர் உங்களை தம்முடைய தாசனாகிய ஈசாக்கை போல நல்ல தேவ மனிதருக்கோ அல்லது உயர்ந்த இடத்தில் இருக்கும் கர்த்தருடைய பிள்ளைக்கோ துணையாக கொடுத்தால் அப்பொழுது நீங்கள் செய்ய



வேண்டிய பொறுப்பை உங்கள் கைகளில் எடுக்க இந்த அடித்தளம் பெரிதும் உதவும். சில சமயங்களில் இது போன்ற பாஸ்டரை கட்டினால் நாம் சுகமாய் வாழலாம் அல்லது இது போன்ற ஒரு மனிதரை திருமணம் செய்தால் நாம் நன்கு வாழலாம் என்று ஒரு எல்லைக் குறியை நாம் வைத்திருக்கலாம். அதற்கு காரணம் சிலருடைய வாழ்க்கையின் தற்போதைய ஆசீர்வாதங்களை மட்டும் நாம் பார்ப்பதுதான்.

ஆனால் இந்த ஆசீர்வாதங்களுக்கு மறுமுனையில் செய்த கிரயத்தை, தியாகத்தை நாம் பார்க்க தவறிவிடுகிறோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆங்கில பிரசங்கியார் ஒருவர் சொன்னது என் நினைவிற்கு வருகிறது. அதை அப்படியே எழுதுகிறேன். "The People see the Glory but they don't know about the story" தமிழில் என் பாணியில் சொல்லுகிறேன் கவனியுங்கள்.

‘‘அன்னார்ந்து கட்டிடத்தை பார்க்க தெரிந்தவர்களுக்கு அடியில் இருக்கும் அஸ்திபாரத்தை பார்க்க தெரிவதில்லை’’. அது தான் சிலரின் வாழ்க்கையில் பிரச்சனையாக மாறிவிடுகிறது. ஆகவே அன்பானவர்களே! எந்த ஒரு ஆசீர்வாதத்திற்கு பின்னனியிலும் தியாகமும், உழைப்பும் இருக்கிறது என்பதை மனதில் வையுங்கள் அதை உங்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துங்கள் அப்பொழுது ஆசீர்வாதத்தை அறுவடை செய்வீர்கள். (நீதி 10:4 சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உணடாக்கும்...).

## 2) பிறருக்கு கொடுக்கும் மனமுடையவள் :-

எலியேசர் தண்ணீரை கேட்ட பொழுது குடத்தை சாய்த்தாள் ரெபெக்காள், இப்போது நாங்கள் தங்க இடம் உங்கள் வீட்டில் இருக்குமா? என்று எலியேசர் கேட்டார். அதற்கு ரெபெக்காள் சொல்லும் பதிலை பாருங்கள் ‘‘எங்களிடத்தில்

வைக்கோலும், தீவனுமும் வேண்டிய மட்டும் இருக்கிறது. இராத் தங்க இடமும் உண்டு. தண்ணீரை கேட்டால் குடத்தை சாய்க்கிறாள், இடத்தை கேட்டால் வைக்கோலை கொடுக்கிறாள், எள் என்றால் எண்ணெயாய் இருக்கிறாள். இந்த இடத்தில் ஒன்றை கூர்ந்து கவனிக்கிறேன்.

ஈசாக்கின் மனைவியான போது நடைபெற்ற சம்பவம் அல்ல இது. எலியேசர் வந்ததின் நோக்கமே தெரியாது இந்த ரெபெக்காளுக்கு; யாரோ ஒரு மனிதர் இந்த மனிதருக்கு தாரளமாய் கொடுக்கும் தயாள குணம் இந்த ரெபெக்காளுக்குள் இருந்திருக்கிறது அதை இப்படி சொல்லும்படி விரும்புகிறேன். தேவையுள்ள ஒரு மனிதனுக்கு தன் ஆசீர்வாதத்திலிருந்து இவள் திறந்து கொடுக்கிறாள். அதினாலே இவளுடைய வாழ்க்கையின் தேவைக்கென்று கர்த்தரோ வானத்தையே திறந்து கொடுக்கிறார்.

ஆகவே தான் ரெபெக்காளின் வாழ்வின் பிந்தின நாட்கள் மகா ஆசீர்வாதமாய் இருந்தது. யார் என்றே தெரியாத மனிதனுக்கு தன் உழைப்பையும், வீட்டில் உள்ளதை கொடுக்கும் ரெபெக்காள் எங்கே? சொந்த வீட்டில் உள்ள நபர்களுக்கு தன் உழைப்பையும் தன்னிடத்தில் உள்ளதையும் கொடுக்காத மனைவிகள் எங்கே? யோசித்துப் பாருங்கள்.

எங்க அப்பா வீட்டிலிருந்து வந்த பெட், பிரட், பிஸ்கட் இது என்று கவரைக் கூட பிரிக்காத மனைவியாக நீங்கள் இருக்காதீர்கள். தாராளமனமுடையவராய் இருங்கள். அப்பொழுது ஆண்டவரும் ஏராளமாய் கொடுக்கும் தயாளராய் இருப்பார்.

**3) தாழ்மையுள்ளவள் :**

ரெபெக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கை கண்டபோது... அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காட்டிக்



கொண்டாள். (ஆதி 24:64,65) தன்னை அழைத்து வந்த அந்த ஊழியக்காரன் ''அவன் தான் என் எஜமான் என்று சொன்னார்'' அவ்வளவு தான்! உடனே அவள் கீழே இறங்கி விட்டாள் முக்காடிட்டு கொண்டாள்.இங்கே கவனியுங்கள்...முன்னே அவள் தண்ணீர் மொள்ள போன போது அவள் சாதாரண பெண். இப்போதோ மணவாட்டியாக ஆகும்படி தெரிந்தெடுக் கப்பட்ட பெண்.

அதுமட்டும் அல்ல பொற்காதணிகள் மற்றும் அவளை அலங்கரிக்கும்படி அழகிய ஆபரணங்கள், வெள்ளி உடைமைகள், பொன் உடைமைகள், அற்புதமான வஸ்திரம் இவை அத்தனையும் உடையவளாக ஒட்டகங்கள் மேல் ஏறினவளாய் வந்தாள். அந்த சமயத்தில் தன்னுடைய மணவாளனை பார்த்தவுடன் தன்னை தாழ்த்தும்படி கீழே இறங்கி முக்காடிட்டு கொண்டாள். ஆஹா! எத்துனை அடக்கமான பெண்.

இந்த ஆபரணம், வஸ்திரம், பொன் உடைமை, ஒட்டகம் இவையெல்லாம் ஆவிக்குரிய வரங்களுக்கும், தேவன் பூமியில் கொடுக்கும் உயர்வுகளுக்கும் திருஷ்டாந்தமாய் இருக்கிறது. நமக்கு எத்தனை உயர்வுகள் இருந்தாலும் நமது மணவாளனை (இயேசு) பார்க்கும் போது நம்மை தாழ்த்த வேண்டியது மிகவும் அவசியம். அதே வேளையில் இன்னொன்றையும் சொல்லும்படி விரும்புகிறேன்.

நித்திய மணவாளனை சந்திக்கும் முன் தேவன் நமக்கு இந்த பூமியில் வைத்திருக்கும் மணவாளனுக்கு அதாவது நமது கணவருக்கு கீழ்ப்படிந்து அடங்குவது மிகவும் அவசியம். சில சமயங்களில் தேவன் சிலருக்கு வரங்களையும், உயர்வுகளையும் கொடுத்துவிட்டால் போதும் அவ்வளவுதான் கணவரை கனப்படுத்தாமல், அடங்காமல் போவது நவீன உலகின்

நாகரீகம் என்று பலர் நினைத்து கொள்கின்றனர். அவைகள் அநேக இடங்களில் அரங்கேறிவருகிறது. இல்லை அருமையானவர்களே! இது ஆவிக்குரியவர்களுக்கு அழகல்ல என்பதை அழுத்தமாய் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என் கணவர் அடிக்கடி சொல்லும் நகைச்சுவை உண்டு. அவர் ஒரு திருமணத்தில் பிரசங்கித்து கொண்டிருந்தார் கிறிஸ்து சபைக்கு தலையாய் இருப்பது போல, புருஷனும் மனைவிக்கு தலையாய் இருக்கிறான்.

ஆகவே கணவர் தான் தலை என்று அவர் சொல்ல முன் வரிசையில் அமர்ந்திருக்கும் ஒரு அம்மா பக்கத்தில் இருந்த சகோதரியை பார்த்து சொன்னார்களாம். ஆமாம்... ஆமாம்... எங்கவீட்டில் அவர்தான் தலை ஆனா நான் தான் கழுத்து ; நான் எந்த பக்கம் திரும்புகிறேனோ அப்படியே அவரையும் ஒரு திருப்பு திருப்பிடுவேன். பார்த்தீர்களா! நீங்கள் அப்படி முயற்சிக்காதீர்கள். தலையை கனப்படுத்துவோமாக (தாழ்மையே நமது அலங்கரிப்பாய் இருக்கட்டும். காரணம் தாழ்மை உள்ளவர்களுக்கு தேவன் கிருபை அளிக்கிறார்).

### 4) ஆறுதல் செய்பவள் :

ரெபெக்காளைப் பார்த்த ஈசாக்கு அவளை தன் தாயின் கூடாரத்திற்கு அழைத்துக்கொண்டு போய், அவளை நேசித்தானாம். அப்பொழுது ஈசாக்கு தன் தாய்க்காக கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான். (ஆதி 24:67)

### i) அமைதியாய் இருத்தல் :

ரெபெக்காள் தன் கணவருக்கு ஆறுதலாய் இருந்தாள். முதல் சந்திப்பு அது. ஆரம்பத்திலே ஈசாக்கு செய்த காரியத்தைக் கவனித்துப் பாருங்கள். சந்தித்த உடனே தாயின் கூடாரத்திற்கு



அழைத்துக்கொண்டு போனாராம். என்னப்பா இது ? இப்பதான் வந்தேன், அதற்குள்ள அம்மா இராமாயணமா என்றெல்லாம் ரெபெக்காள் கேள்வி கேட்கவில்லை. அமைதிக்காத்தாள் அவ்வளவு தான் ஆறுதல் பிறந்தது. கோபித்துக் கொள்ளாதீர்கள். இங்கே ஒன்றை சொல்ல விரும்புகிறேன். சில குடும்பங்களில் திருமணம் நடைபெற்ற பின்பு இந்த வசனம் தலைகீழாய் நடக்கிறது. அதை எழுதுகிறேன் பாருங்கள்!

''அவன் தன் தாயிக்காக கொண்டிருந்த ஆறுதல் நீங்கி துக்கம் கொண்டிருந்தான்''. நம்ம எப்படி ?!!! ஒரு வேளை புதிதாய் நீங்கள் ஒரு குடும்பத்திற்குள் நுழையலாம். அங்கே அவர்களது வழக்கம் உங்கள் வழக்கத்திற்கு மாறாக இருக்கலாம். அங்கே அடம் பிடிக்காதீர்கள். அதற்கு பதிலாக அமைதியாய் இருங்கள். அப்பொழுது ஆறுதலாய் இருப்பீர்கள்.

குடும்பத்தில் வரும் சில குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு இதுதான் மருந்து. நீங்கள் அமைதியாய் இருக்க கர்த்தர் உங்களுக்காய் கிரியைச் செய்வார். ஒருவேளை உங்கள் கணவர் தாயைக் குறித்தோ, தனது சகோதரிகளைக் குறித்தோ ஆதங்கத்தில் சற்று அதிகமாய் பேசிவிடலாம். அதனால் ஆத்திரம் அடையவோ, அலட்டி கொள்ளவோ தேவையில்லை. இவையெல்லாம் ஒரு சின்ன விஷயம் இதற்கெல்லாம் அமைதிக் காத்தால் போதும் நாளடைவில் அந்த சூழ்நிலையும் மாறும்.

### ii) ஆவியானவரின் துணை ஆறுதல் :

வேதத்தில் ஒரு பகுதி என் சிந்தையில் இப்பொழுது பளிச்சென்று தோன்றுகிறது. லூக்கா 2:25 ல் சிமியோன் என்னும் பக்தியுள்ள மனுஷன் இஸ்ரவேலில் ஆறுதல் வர காத்திருந்தான். அவர் மேல் ஆவியானவர் இருந்தார். அவன்

ஆவியின் ஏவுதலினாலே தேவாலயத்திற்கு வந்தபொழுது கிறிஸ்துவை கண்டான். அப்பொழுது சமாதானமும், ஆறுதலும் அவரை நிரப்பிற்று.

அருமையானவர்களே! இந்த வார்த்தையைச் சற்று கவனியுங்கள் ''ஆவியின் ஏவுதலினால் அவன்... ஆறுதல் அடைந்தான்''. பார்த்தீர்களா ஆவியானவருடைய ஏவுதலும், ஆவியானவருடைய இடைப்பாடும் எந்த மனுஷனுக்குள் இருக்கிறதோ அவர்களுக்குள் கட்டாயம் தேவ ஆறுதல் இருக்கும்.

அப்படிபட்டவர்கள் ஆறுதல் அடைபவர்கள் மட்டும் அல்ல ஆறுதல் செய்பவர்களாகவும் இருப்பார்கள். ஆறுதல் அடைவது சரி, ஆறுதல் படுத்துவது என்பது இங்கு பொருந்தவில்லையே! இது என்னமோ அப்துல் காதருக்கும், அமாவாசைக்கும் முடிச்சுபோடுவது போல இருக்கிறதே என்று நீங்கள் சொல்வது எனக்கு கேட்கிறது. வேதத்தில் ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுப்படுத்துகிறேன்.

அப்போஸ் 2-ம் அதிகாரத்தில் மேல் வீட்டில் கூடியிருந்த எல்லார் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப்பொழுது பேதுரு எழும்பி பிரசங்கித்தார். வேதம் சொல்லுகிறது. ''அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர் களாகி.....'' (அப் 2:37). பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்ட பேதுரு பேசின போது ஆவியானவரின் கிரியைகளில் ஒன்றான பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துதல் நடைப்பெற்றது.

ஆவியானவர் பாவத்தைக் கண்டிக்கிறவர் மாத்திரம் அல்ல. அவர் நம்மை ஆறுதல் செய்பவராகவும் இருக்கின்றார். பரிசுத்த ஆவியினால் ஒரு மனிதன் நிரப்பப்படும் போது ஆவியானவரின் கிரியைகள் கட்டாயம் அவரில் வெளிப்படும்.



ஆவியானவரைக் குறித்து இயேசு சொல்லும் பொழுது தேற்றரவாளர் என்று அழகான வார்த்தையைப் பயன்படுத்தினார். ஆம்! இந்த தேற்றரவாளரின் பிரசன்னத்தில் நிரம்பும் போது நாமும் அநேகரை தேற்றி ஆறுதல் படுத்துகிறவர்களாக இருப்போம்.

ஆகவே எனக்கு அருமையானவர்களே குடும்பத்தில் குழப்பங்கள் வரலாம். மாறுபட்ட சூழ்நிலைகள் வரலாம். அப்படிப்பட்ட நேரத்தில் அதிகமாய் ஆவியில் நிரம்புங்கள். ஆவியானவரின் நடத்துதலோடு பேசுங்கள். அப்பொழுது ஆறுதல் அடைவீர்கள்.

தயவு செய்து ஆவேசபட்டு பேசி விடாதீர்கள். அதில் பிரயோஜனம் ஒன்றும் இருக்காது. ஆவியின் நிறைவோடு பேசுங்கள். அப்பொழுது ஆறுதலும் உண்டு. ஆச்சரியமும் உண்டு. எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படு கிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோமர் 8:14)

### iii) வேத வசனத்தினால் ஆறுதல் :

நாம் ஆறுதல் அடையும்படி கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் வழிகளும் முக்கியமான ஒன்று. கர்த்தருடைய வசனம். I தொச 4 : 18 ''இந்த வார்த்தையினால் நீங்கள் ஒருவரை ஒருவர் தோற்றுங்கள்''. இந்த வார்த்தை மரண வீட்டிற்கு மட்டுமல்ல எல்லா வீட்டிற்கும் சொந்தமானது தான்.

நம்மை தேற்றிக்கொள்ள பெரிய பொக்கிஷமாக அவருடைய வார்த்தையை கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிறார். ஆனால் அதை சரியாய் பயன்படுத்த தினந்தோறும் அதில் நமக்கு பழக்கம் இருக்கவேண்டியது அவசியம். இந்த பழக்கம் இல்லாததினால் வசனத்தைப் பயன்படுத்துவதில் தர்ம சங்கடம்

சில சமயத்தில் உண்டாகிறது.

ஒரு துக்க வீட்டில் வந்து சந்தோஷமாய் இருங்கள் என்று பிரசங்கம் செய்வதும் திருமண வீட்டிற்கு போய் ''விருந்து வீட்டிற்குப் போவதைப் பார்க்கிலும் துக்க வீட்டிற்கு போவது நலம்'' என்று பிரசங்கம் செய்வதும் எப்படி இருக்குமோ. அப்படிதான் ஏற்ற சமயத்தில் சொல்லப்படாத வார்த்தைகளும் இருக்கும்.

தேவனுடைய தாசனாகிய யோபு போராட்டமான பாதையில் கடந்து போகிறார். சரீர பெலவீனம், குழப்பங்கள் நடுவில் இருக்கும் அவரை பார்த்து ஆறுதல் சொல்ல நண்பர்கள் வருகிறார்கள்.

அப்பொழுது தேமானியனாகிய எலிபாஸ் பேசின வார்த்தைகளைக் குறித்து யோபு சொல்லும் வார்த்தையைக் கவனியுங்கள். (யோபு 6:7) ''உங்கள் வார்த்தைகளை என் ஆத்துமா தொட மாட்டேன் என்கிறது. அவைகள் அரோசிகமான போஜனம் போல் இருக்கிறது''. எலிபாஸ் வந்தது சரிதான் பேசும் படி வாயைத் திறந்தது சரிதான். ஆனால் சரியாய் பேசவில்லை என்பது தான் எதார்த்தம்.

யோபு ஒரு தேவையில் இருக்கும் போது இவர் ஒன்றைக் குறித்துக் பேசினால் பின்னே அப்படித்தான் இருக்கும். பிரச்சனைக்கு பதில் சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு சிலர் பேசும் பேச்சு புலி பாலைக் கொண்டு வந்து பூஜை செய்தால் புண் ஆறும் என்று சொல்வது போலத்தான் இருக்கும். என்ன குழம்புகிறதா? சிலர் பேசினால் இதை விட மோசமாக இருக்கும்.

இதை பவுல் வாழ்க்கையில் உற்றுப் பாருங்கள். அத்தேனேப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்த பட்டணம்.



பவுல் அந்த இடங்களைச் சுற்றிப்பார்க்கிறார். விக்கிரகங்களுக்கு அநேக பலிபீடங்கள். அதன் நடுவே ஒரு பலி பீடம். அதில் வார்த்தை ''அறியப்படாத தேவனுக்கு'' அவ்வளவு தான் அதைப் பிடித்துக் கொண்டார். அதை வைத்தே அன்றைய தின சுவிசேஷ பிரசங்கம். அதினால் அநேக ஆத்துமாக்கள் தொடப்பட்டார்கள். இதுதான் நம்முடைய அனுபவமாக இருக்க வேண்டும்.

சமயத்திற்கு ஏற்ற வார்த்தைகளை பேசும் கல்விமானின் நாவை தருகிறவர் நமது ஆண்டவர். நீங்கள் கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு இந்த கிருபையை தருவார். நீங்கள் ஆத்துமாக்களுக்கு பிரயோஜனமாய் இருப்பீர்கள்.

ஒருமுறை என் கணவர் மருத்துவமனையில் உடல்நிலைக் குறைவால் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதேசமயம் இன்னொரு சகோதரரரும் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர்கள் குடும்பம் கிறிஸ்தவ குடும்பம். அவர்கள் மனைவி பேசின பொழுது அந்த சகோதரி வெளிநாட்டில் உள்ள வேதகலா சாலையின் பேராசிரியர் என்பது தெரிந்தது.

அவர்கள் வாழ்க்கையின் போராட்டங்களை அந்த நாட்களில் என்னோடு அதிகமாய் பகிர்ந்து கொண்டார்கள். அந்த சமயத்தில் அவர்கள் போராட்டத்திற்கான பிரத்யேக வசனங்களை தினந்தோறும் எடுத்து காண்பிப்பேன்.

அப்பொழுது அவர்கள் சொன்ன வார்த்தை என்ன தெரியுமா? அநேக மாணவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் என் போராட்டத்திற்கு இப்படியெல்லாம் வசனம் இருக்கிறதை இப்பொழுது தான் பார்க்கிறேன்.

ஆம்! அன்பு சகோதரிகளே! நாம் பெரிய அறிவாளியாய் இல்லாமல் இருக்கலாம். உண்மையாய் வசனத்தின் மேல் அன்பு

இருந்தால் போதும். அவர் தம்முடைய வார்த்தையை உங்களுக்கு விளக்கிக் காண்பிப்பார், கோர்த்து கொடுப்பார். அப்பொழுது நீங்கள் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.

''ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானம்''. (நீதி 25:11)

## 5) தேவனிடத்தில் ஆலோசனை கேட்பவள் :

ரெபெக்காள் கர்ப்பம் தரிக்கும்படி தேவன் கிருபை செய்கிறார். அவள் கர்ப்பத்தில் பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. கர்ப்பத்தில் இருக்கும் பிள்ளையின் அசைவு சற்று வித்தியாசப்படும் போது உடனே ஸ்கேன் செய்து பார்ப்பது இக்காலத்து வழக்கம்.

ஆனால் ரெபெக்காள் ஸ்கேன் பார்க்க செல்லவில்லை. அந்தக் காலத்தில் தான் ஸ்கேன் இல்லையே! என்று நீங்கள் சொல்வது என் காதுகளில் விழுகிறது. ஆனால் மருத்துவச்சிகள் இருந்தார்கள், கணவர் இருந்தார், மூத்தோர் எல்லோரும் இருந்திருப்பார்கள். அவர்களிடமெல்லாம் புலம்பி தள்ளாமல், சோர்ந்து போய்விடாமல் கர்த்தரிடம் போய் விசாரித்தாள்.

தாய்மார்கள் பிறரிடம் ஆலோசனை கேட்பது நல்லது தான். ஆனால் மக்களிடம் தமது காரியங்களை பகிர்ந்து கொள்வதை விட தேவனிடம் விசாரிப்பது நல்லது. பிள்ளைகளை குறித்த ஆலோசனையை தேவனிடத்தில் கேட்க வேண்டியது அவசியம். தேவனிடம் வெளிப்பாட்டை பெற்று அதன்படி செயல்படுவதுதான் குடும்பத்திற்கு ஆசீர்வாதம்.

''இப்படியானால் எனக்கு எப்படியோ?'' என்று ரெபெக்காள் தேவனிடத்தில் விசாரித்தாள், பதிலை பெற்றுக் கொண்டாள். அது தான் கர்த்தருடைய சித்தத்தின்படி பிள்ளையை வளர்க்க உதவியது.



எனக்கு அன்பானவர்களே! உங்கள் பிள்ளைகள் கர்த்தருக்குள் வாழவும், வளரவும் வேண்டுமானால் முதலில் அவர்களை குறித்த வெளிப்பாடு உங்களுக்குள் இருக்க வேண்டியது அவசியம். இந்த வெளிப்பாடு இதுவரைக்கும் உங்களுக்குள் இல்லையென்றால் இப்பொழுதே முழங்கால் படியிடுங்கள்.

நீர் கொடுத்த பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், நடத்த வேண்டும் என்று எனக்கு சொல்லும் ஆண்டவரே என்று அவர் பாதத்தை இருக பிடியுங்கள். நிச்சயம் கர்த்தர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவர். அப்பொழுது உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை கர்த்தருக்குள் நிலைத்திருக்கும். ஆகவே கர்த்தரிடத்தில் விசாரிப்பவர்களாக இருப்போமாக.

## 6) தேவ சித்தத்தை நிறைவேற்ற தீவிரமுள்ளவள் :

தேவனிடத்தில் வெளிப்பாட்டை பெற்றுக் கொண்டவள். அத்தோடு தன் வேலையை பார்க்க போய்விடவில்லை. மாறாக தான் பெற்றுக் கொண்ட வெளிப்பாட்டை நிறைவேற்ற ஜாக்கிரதை உள்ளவளாக இருந்தாள். தீவிரமாய் செயல்பட்டாள் பல நேரங்களில் கர்த்தர் தமது சித்தத்தை நிறைவேற்ற பெண்களை அதாவது தாய்மார்களை பயன்படுத்துகிறார்.

நியாயாதிபதிகள் - 13ஆம் அதிகாரத்தில் மனோவாவின் மனைவிக்கு முதலில் இரகசியம் வெளிப்படுத்தப்படுகிறது யோசேப்பு - மரியாள் தம்பதியரில் மரியாளுக்கு முதலில் தேவ சித்தம் வெளிப்படுத்தப்படுகிறது.

ஈசாக்குக்கு கிடைக்காத இந்த மாபெரும் வெளிப்பாடு ரெபெக்காளுக்கு வெளிப்படுத்தப் பட்டது. ஆதி 25:23-ஐ வாசித்துப் பாருங்கள். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று எழுதப் பட்டிருக்கிறது. இதுதான் தேவ சித்தம் என்று அறிந்திருந்த ரெபெக்காள். அது நிறைவேற காத்திருந்தாள்.

ஈசாக்கு ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான். ஆனால் ரெபெக்காளோ பெற்ற வெளிப்பாட்டை பிள்ளைக்குள் ஊட்டி வளர்த்திருந்தாள். அதனால் தான் யாக்கோபுக்கு அந்த தலைமகன் உரிமை மேல் அவ்வளவு ஆசை வந்திருக்க வேண்டும். ஏசா வேட்டை ஆடிவிட்டு பசியோடு வருகிறான், யாக்கோபின் கைகளில் கூழ் இருக்கிறது.

ஏசா ஒரு வேளை பசிக்கு கூழை கேட்கிறான்; யாக்கோபோ நீண்ட நாள் பசியை தீர்த்துக் கொள்கிறான். அந்த சேஷ்ட புத்திர பாகத்தை எனக்கு தா, இந்த கூழை நான் உனக்கு கொடுக்கிறேன். இங்கு சற்று கவனியுங்கள் அநித்தியமானதை இழந்து நித்தியமானதை சுதந்தரிக்கும்படியான தரிசனம் யாக்கோபிற்குள் ஊட்டப்பட்டிருக்கிறதை என்னால் பார்க்க முடிகிறது.

உலகின் மேல் ஆசைவைத்து உன்னதத்தை இழக்கும் கூட்டம் தரிசனம் இல்லாதவர்கள். உன்னதத்தின் மேல் வாஞ்சை உள்ளவர்களாய் உலகத்தை இழக்க ஆயத்தமாயிருக்கிறவர்கள் தரிசனம் மிகுந்தவர்கள் இப்பொழுது ஒரு கேள்வி. உங்கள் பிள்ளைக்கு முன்பாக அநித்தியத்தையும், நித்தியத்தையும் வைத்தால் உலகத்தையும், உன்னதத்தையும் வைத்தால், பரிசுத்தத்தையும், பாவத்தையும் வைத்தால் அவர்கள் எதை தேர்ந்தெடுப்பார்கள்?

அவர்கள் கர்த்தருக்கு அடுத்தவைகளை தேர்ந்தெடுப் பார்கள் என்ற நிச்சயம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் தேவ தரிசனத்தை ஊட்டி வளர்த்த சரியான தாய் என்று வேத வசனத்திற்கு முன்பாக நிற்கிறீர்கள். இல்லையென்றால் கர்த்தருக்குள் உங்களை மாற்றிக் கொள்ளும்படி இப்போதே ஒப்புக் கொடுங்கள். பிள்ளைகளுக்குள் தரிசனத்தை ஊட்ட கர்த்தர் உங்களுக்கு கிருபை பாராட்டுவாராக.



தீர்க்க(தரிசனம்) இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள். இன்னொரு முக்கிய சம்பவத்தை கவனியுங்கள். தன் கணவனாகிய ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்க தீர்மானித்திருந்த போது இது யாக்கோபை சேர வேண்டிய ஆசீர்வாதம் என்ற வெளிப்பாட்டை உடைய ரெபெக்காள் தீவிரமாய் செயல்பட்ட விதத்தை வேதம் பதிவு செய்கிறது. (ஆதி 27:5 to 17).

தன் குமாரனை அழைத்து பேசுவதை இங்கே கவனியுங்கள். தன் குமாரனை ஆயத்தப்படுத்தி அந்த ஆசீர்வாதத்திற்குரியவன் அவன் என்பதை அவனுக்கு உணர்த்திய விதத்தைப் பாருங்கள்.

ஈசாக்குக்குத் தெரியாமல் ரெபெக்காள் செய்த காரியம் தவறுதான். அதை பின்வரும் வரிகளில் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆனால் இப்பொழுது அவள் தன் குமாரரிடம் பேசியது தான் சரி என்பதை முதலில் கவனிக்க போகிறோம்.

ஏதோ ஈசாக்கு ஆசீர்வதிக்க விரும்புகிறார், இனி கர்த்தர் ஆச்சு, அவராச்சு என்று கர்த்தர் மேல் பழி போடாமல் பேச வேண்டிய நேரத்தில் சரியான நபரிடம் பேசியது மிகச் சரியானது என்பதை சொல்ல விரும்புகிறேன்.

நமது கிறிஸ்தவ குடும்பங்களில் இந்த நிலை வரவேண்டியது அவசியம். அதை விட்டுவிட்டு பிள்ளைகள் தேவ திட்டத்தை விட்டு தூரம் போகும் போது, கணவர் தேவ திட்டம் மாறி செல்லும் போதும் கர்த்தாவே நீர் பார்த்துக் கொள்ளும் என்று சொல்லி கை கழுவிவிடாதீர்கள். சில சமயங்களில் கர்த்தாவே பார்த்துக் கொள்ளும் என்று சிலர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.

நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் உங்களுக்கு கர்த்தர் வெளிப்பாட்டைக் கொடுத்தார். இது உங்கள் பொறுப்பு ஆகவே உரிமையோடு, உணர்ச்சியோடு பேச வேண்டிய நேரத்தில் அமைதி காப்பது தெய்வீகத்தனம் என்று நினைக்காதிருங்கள். நமக்கென்ன என கையைக் கழுவிக் கொள்வதற்கு சமானம். அது பிலாத்துவின் செயல்பாடு.

எனக்கு அருமையானவர்களே! உங்கள் குடும்பத்தில் தடம் மாறுகிறார்களா? கணவர் தேவசித்தத்தில் தடுமாறுகிறாரா? ஜெபிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் உண்மையான அக்கறையோடு அவர்களோடு உட்கார்ந்து பேசி உணர வையுங்கள். இது கர்த்தர் சிலருக்கு பிரத்தியட்சமாய் சொல்லும் வார்த்தை. அப்பொழுது தீவிரமாய் செயல்படும் தாயாய் நீங்கள் விளங்குவீர்கள்.

## ரெபெக்காளின் பெலவீனம் :-

ரெபெக்காளின் அநேக நற்பண்புகளைப் பார்த்த அதே சமயத்தில், அவரது வாழ்க்கையில் இருந்த சில பெலவீனங் களையும் பார்ப்பது நமக்கு படிப்பினையாக அமையும்.

1) ரெபெக்காள் கர்ப்பமாய் இருக்கும் போது கர்த்தரிடத்தில் விசாரித்தாள். அப்பொழுது கர்த்தர் பெரியவன் சிறியவனால் ஆளப்படுவான் என்று சொன்னார். அதை உணர்ந்து தீவிரமாய் செயல்பட்ட ரெபெக்காள் தன் மூத்த குமாரனுக்காக தேவ சமூகத்தில் இரக்கம் வேண்டி ஜெபிக்க மறந்துவிட்டாள். இதை ஆபிரகாமின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

ஈசாக்கைக் குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகளை கர்த்தர் அடுக்கடுக்காய் பேசிக் கொண்டிருக்கிறார். அந்த சமயத்தில் ஆபிரகாமுக்கும் வேலைக்காரியாகிய ஆகாருக்கும் பிறந்த இஸ்மவேல் மேல் பாரம் கொண்டவராக ஆபிரகாம்



ஜெபிப்பதைப் பாருங்கள் ''இஸ்மவேல் உம்முடைய சமூகத்தில் பிழைப்பானாக''. இந்த ஒரு வரி ஜெபத்திற்கு கர்த்தர் கொடுத்த பதில் என்ன தெரியுமா?

''அவனையும் பெரிய ஜாதியாக்குவேன்''. தனக்கும் வேலைக்காரிக்கும் பிறந்த குமாரன் மேல் ஆபிரகாமுக்கு இருந்த பாரம் கூட, தனக்கும் ஈசாக்குக்கும் பிறந்த மூத்த குமாரன் ஏசாவின் மேல் ரெபெக்காளுக்கு இல்லாமலிருந்தது மிகவும் அதிர்ச்சியாய் இருக்கிறது.

ஒரு வரி ஜெபத்தைக் கூட ஏசாவிற்காக ரெபெக்காள் செய்ததை நம்மால் பார்க்க முடியவில்லை. அதன் விளைவு ஏசா கானானிய ஸ்தீரிகளை பெண் கொண்டான். அவர்கள் ஈசாக்கிற்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்.

அருமையானவர்களே! நியாயம், சட்டம் என்றெல்லாம் இருந்தாலும், நமது ஆண்டவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். ஆகவே உங்கள் பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டியது உங்கள் கடமை.

அதில் நீங்கள் தவறுவீர்களானால் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு மன வேதனையை கொண்டு வருவார்கள். மனநோவாய் இருப்பார்கள். பின்பு கர்த்தரை நொந்து கொள்ளா திருங்கள். ஆகவே பிள்ளைகளுக்காக தேவ சமூகத்தில் விண்ணப்பிப்போமாக.

2) சிறியவன் தான் பெரியவனை விட ஆசீர்வதிக்கப் படுவான் என்ற வெளிப்பாடு ரெபெக்காளுக்குக் கொடுக்கப் பட்ட ஒன்று. இந்த விஷயம் கடைசிவரை ஈசாக்கிற்கு தெரியாமலேயே போனது, மிகவும் யோசிக்கப்பட வேண்டியது.

20 வருடம் ஈசாக்கிற்கும், ரெபெக்காளுக்கும் பிள்ளை இல்லை. 20 வருடம் ஒன்றாய் குடும்பம் நடத்தி இருக்கிறார்கள். பிள்ளைகள் பிறக்கிறார்கள், வளருகிறார்கள் பல ஆண்டுகள் ஒன்றாகவே வாழ்ந்தாலும், தன் கணவர் நன்கு ஜெபிப்பவராக இருந்தாலும், தன் கணவரிடத்தில் தரிசனத்தை பகிர்ந்து கொள்ளாதிருந்தது தவறு என்றே சொல்ல வேண்டும். கணவருக்கு தெரியாமல் மறைத்து வைக்கும் காரியம் சில ஆவிக்குரியவர்களுக்குள்ளே! இருந்து கொண்டு தான் வருகிறது.

உங்கள் கணவர் உங்களுடனே ஒரே மாம்சம். ஆகவே வாழ்க்கையில் பல காரியங்களை மறைத்து வைத்துவிட்டு, பின்பு வரும் எதிர் விளைவுகளை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்காதீர்கள்.

சிலரெல்லாம் யாராகிலும் ஒருவர் ஒரு நல்ல நிறுவனமிருக்கிறது. சேமிக்க சிறந்த இடம் சினேகா பைனான்ஸ் என்று சொன்னால், கணவருக்கு தெரியாமல் சேமிப்பார்கள்.

பின்பு ஒருநாள் அந்த 'சினேகா' Snake -ஆக மாறி பணத்தைத் தர மறுத்துவிட்டால் பணம் போனதை விட உங்களுக்குள் இருக்கும் குற்ற உணர்விருக்கிறதே அதை யாராலும் சரி செய்து விட முடியாது. ஆகவே சிறிய காரியமோ, பெரிய காரியமோ கணவரிடத்தில் மறைக்காமல் வெளிப்படையாய் இருங்கள்.

3) ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிக்க விரும்பினபோது யாக்கோபு தான் அந்த ஆசீர்வாதத்திற்குரியவன் என்று யாக்கோபுக்கு உணர்த்தியது சரியானதுதான். ஆனால் அவன் அதை பெற்றுக்கொள்ளும் படிக்கு வழி நடத்திய விதம்தான் தவறு. யாக்கோபிடம் பேசியது போல ஈசாக்கிடம் பேசி யிருந்தால் எவ்வாளவு அருமையாய் இருந்திருக்கும். அதை



விட்டு விட்டு ஏசாவின் வஸ்திரத்தை எடுத்து யாக்கோபுக்கு கொடுத்து ஏசாவாகவே தகப்பனை ஏமாற்றும்படிக்காக அனுப்பிவிட்டது வேதனைக்குறியது.

இங்கே தான் தாயாகிய நாம் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய பாடம் இருக்கிறது. தகப்பனை ஏமாற்றக்கூடிய துணிவை, தாயே பிள்ளைக்கு ஊட்டுவது, தகப்பன் தேவ திட்டத்தில் தடுமாறும் போது தகப்பனை மடக்க பிள்ளையை தூண்டுவது, பிள்ளைகள் செய்யும் தவறை தகப்பனுக்கு தெரியாமல் மறைப்பது, இதெல்லாம் பெரும் விளைவை பிள்ளைகள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் என்பதை நினைவில் வையுங்கள்.

யாக்கோபு இதை செய்ய பயந்த போது அம்மா சொன்ன வார்த்தையை கவனியுங்கள். நான் சொல்வதை கேள் ''என் மகனே, உன்மேல் வரும் சாபம் என் மேல் வரட்டும்'' (ஆதி 27:13) இந்த வீர பேச்சு நன்றாக தான் இருக்கிறது. ஆனால் யாக்கோபின் வாழ்வில் அவைகள் கைக்கொடுக்க வில்லை. வெகு காலம் கடந்துவிட்டது அம்மாவும் கடந்து போய் விட்டார்கள்.

இப்பொழுது யாக்கோபுக்கு பல பிள்ளைகள், பிள்ளைக்குள்ளே பிரச்சனை சகோதரர் எல்லாரும் யோசேப்பின் மீது பொறாமை கொள்கிறார்கள். அவனை மீதியானரின் கையில் விற்று விட்டு அவன் வஸ்திரத்தையோ மிருகத்தின் இரத்தத்தில் தோய்த்து எடுத்து விட்டு வந்து அப்பாவினிடத்தில் காண்பிக்கிறார்கள். அதை பார்த்த யாக்கோபு அலறி துடிக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக தன் சகோதரன் வஸ்திரத்தைக் கொண்டு அப்பாவை ஏமாற்றினான். இப்பொழுதோ அவருடைய பிள்ளைகள் தங்களுடைய சகோதரன் வஸ்திரத்தை கொண்டு தன் தகப்பனை ஏமாற்றுகிறார்கள். பார்த்தீர்களா! பல ஆண்டுகளுக்கு முன்பு

செய்தது இப்பொழுது அவருடைய வாழ்க்கையில் கண்ணீர் விட வைக்கிறது - பிரதிபலிக்கிறது. இதுமட்டுமா! அவர் கற்ப பிறப்பில் ஒருவனாகிய ரூபன் தன் தகப்பனுடைய மஞ்சத்தை தீட்டுப்படுத்துகிறான். இது யாக்கோபை நடுநடுங்க வைக்கிறது.

அதுமட்டுமல்ல யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாளின் விஷயத்தில் அவரின் குமாரராகிய லேவியும், சிமியோனும் அவன் வாசனையை கெடுத்தார்கள் என்றும் அவனை கலங்கப்பண்ணினார்கள் எனறும் யாக்கோபே பதிவு செய்கிறார்.

ஆகவே தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளை இப்படி தவறாய் நடத்திவிடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருங்கள். தகப்பனை ஏமாற்றவோ, எதிர்த்து பேசவோ, தட்டி கேட்கவோ, மீறி நடக்கவோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, துணிவை, ஆதரவை கொடுக்காதீர்கள்.

அப்படி செய்வீர்களானால் உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் துணிவை அல்ல துக்கத்தை நீங்களே கொண்டு வருவீர்கள். ஆகவே பிள்ளைகளின் வாழ்க்கையில் எதிர்காலத்தில் சாபத்தை அல்ல ஆசீர்வாதத்தை சேர்த்து வைக்கும் நல்ல தாயாக கர்த்தர் நம்மை வைப்பாராக.

திருமணம் ஆகாத பிள்ளைகள் என்றால் உங்களுக்கு சில வார்த்தைகளை சொல்லும்படி விரும்புகிறேன். உங்கள் தகப்பனையோ, தாயையோ எந்த சூழ்நிலையிலும் ஏமாற்ற நினைக்காதீர்கள். அவர்களை கனவீனப்படுத்தவோ, எதிர்த்து பேசவோ முயற்சிக்காதீர்கள். இப்படி செய்யும் படிக்கு எந்த தேவ தூதன் வந்து சொன்னாலும் அவர்களுக்கு செவி கொடுக்காதீர்கள்.

பூமியில் உன் ஆயுசுநாட்கள் பெருகும் படிக்கு உன் தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக.

# 4

# தெபொராள்

தெபொராள் என்றால் தேனீ என்று அர்த்தம் இந்த தெபொராளின் வாழ்வைப் பற்றி ஆராய்வதற்கு முன்பதாக அவர் வாழ்ந்த காலத்தைப் பற்றி முதலில் அறிந்து கொள்வோமாக.

இஸ்ரவேல் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு வர கர்த்தர் மோசேயை பயன்படுத்தினார். அவர்களுக்கு கானானை பங்கிட்டுக் கொடுக்க கர்த்தர் யோசுவாவை உபயோகித்தார். அதற்கு பின்பு சில காலம் கழித்து இஸ்ரவேல் ஜனத்திற்கு என்று கர்த்தர் ராஜாக்களை ஏற்படுத்தினார்.

இங்கே கவனியுங்கள்! மோசே, யோசுவா போன்ற தலைவர்கள் காலத்திற்கும், சவுல், தாவீது, சாலமோன் போன்ற ராஜாக்கள் காலத்திற்கும் இடையில் பல ஆண்டுகள் இருந்தன. அந்த நாட்களில் ஜனங்களை நடத்த கர்த்தர் ஒரு சில தலைவர்களை எழுப்பினார். அவர்கள் தான் நியாயாதிபதிகள். அந்த காலக்கட்டத்தை விவரிப்பது தான் நியாயாதிபதிகளின் புஸ்தகம்.

இஸ்ரவேல் ஜனங்களை கிதியோன், சிம்சோன், யெப்தா சாமுவேல் போன்ற பல நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்தார்கள். இவர்களை போலவே ஒரு பெண்ணும் மொத்த

இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார்கள் என்பது ஒரு அற்புதமான விஷயம். அந்த பெண் தான் தெபொராள்.

தன் பெயரில் எப்படி தேனீ என்ற அர்த்தத்தை வைத்திருந்தாரோ அப்படியே மெய் வாழ்விலும் அவர் அனுபவம் இருந்தது. சுறுசுறுப்பாய் பேசுவது, விருவிருப்பாய் கிரியை செய்வது, துணிச்சலாய் செயல்படுவது, பொறுப்பாய் நடந்து கொள்வது இப்படி அநேக காரியங்களை இந்த தெபொராளின் வாழ்க்கையில் காணும்படி ஆவியானவர் என் கண்களை திறந்தார். அவற்றில் சிலவற்றை இப்பொழுது பார்ப்போம் வாருங்கள்.

### 1) கணவனோடு இணைந்தே இருந்த தெபொராள் :-

தெபொராளைக் குறித்து வேதத்தில் தேவன் அறிமுகப்படுத்திய முதல் வார்த்தையே என்னைத் தொட்டது. அந்த வார்த்தையை கவனியுங்கள் ''அந்த காலத்தில் லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசி இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வந்தாள்.

விசேஷித்த அழைப்பை பெற்றவர் இந்த தெபொராள் (தீர்க்கதரிசி) பொறுப்பை உடையவர் இந்த தெபொராள் (நியாயம் விசாரிப்பவர்). இதெல்லாம் குறிப்பிடுவதற்கு முன்னதாக இன்னாருடைய மனைவி என்று குறிப்பிட்டதற்காக மெய்யாகவே கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

லபிதோத் ஒன்றும் பெரிய சாதனையாளராக வேதத்தில் நம்மால் பார்க்க முடியவில்லை. ஆனால் தெபொராள் மிக பெரிய சாதனையாளர், வீராங்கனை. தெபொராள் நியாயம் விசாரித்ததினாலே அங்கிருந்த பேரிச்சை மரத்திற்கு கூட தெபொராளின் பெயர் தான். பார்த்தீர்களா எத்தனை அட்டகாசமான அந்தஸ்து சமுதாயத்தில் தெபொராளுக்கு இருப்பினும் எல்லாவற்றிகும் மேலாக தன் கணவரின்



பெயரோடே தன் பெயரை இணைத்துக்கொள்வதினால் கணவரோடு எப்படி இசைந்திருப்பார்கள் என்பது நமக்கும் புரிகிறதல்லவா. பெயர் அளவில் கூட தன் கணவரை விட்டு பிரியாத இந்த பெண்மணிக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

ஆவியின் வரம் இருக்கிறது சமுதாயத்தில் அந்தஸ்து இருக்கிறது ஆனால் தன் கணவரை கனம் பண்ணுவதில் மிகச் சரியாக இருக்கிறார்கள். இதுதான் ஒரு ஆவிக்குரிய பெண்மணியின் அழகு. நிறைகுடம் தளும்பாது என்பதற்கு மிகச் சரியான சான்று.

நம்ம ஆட்களுக்கு ஏதாகிலும் தீர்க்கத்தரிசன வரம் கிடைத்து விட்டால், கட்டின புருஷனை மகனே என்று கூப்பிடுகிறதும். மகனை போலவே அவரை தட்டி வளைய வைப்பதை பார்ப்பதும் வேடிக்கையாக, விளையாட்டாக இருக்கிறது.

சிலருக்கு சமுதாயத்தில் வேலையோ, உயர்வோ கிடைத்துவிட்டால் இன்னாரின் மனைவி என்று சொல்லுவதற்கு கூட வெட்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எங்கே? தெபொராள் எங்கே? நீங்களே யோசித்துப் பாருங்கள்!

அநேக குடும்பங்களில் ஆண்களுக்கு பிரச்சனையே என்னவென்றால் மனைவி என்னை சரியாக மதிப்பதில்லை, என் வார்த்தைகளை கேட்பதில்லை இதுதான் அவர்களின் பிரச்சனை. கணவர் உழைத்து கொண்டு வந்து சம்பளத்தை வீட்டில் கொடுப்பார். மனைவி உயர்வதற்கு அரும்பாடுபட்டு இருப்பார்.

ஆனால் மனைவிக்கு ஒரு வேலை கிடைத்த உடனே கணவரை கனம் பண்ண தவறி விடுகிறார்கள். சகோதரிகளே தெபொராளுக்கு எத்தனை உயர்வு வந்தாலும் தன் கணவரை கனம் பண்ணுவதிலும், கணவரோடு இசைந்து வாழ்வதிலும்

விட்டுக்கொடுக்கவே இல்லை.

சில சமயங்களில் பொறுப்புகள், வேலைகள் என்று பல அலுவல்களில் சிக்கிக் கொள்ளும் பொழுது அறிந்தோ, அறியாமலோ குடும்பத்தோடு செலவு பண்ண வேண்டிய நேரங்களை வேறு இடத்தில் செலவு செய்கிறோம். இது எதிர்பாராத விளைவுகளை குடும்பத்தில் ஏற்படுத்திவிடும்.

அன்பு வாசகரே ! ஊழியமானாலும் சரி, உலக வேலை யானாலும் சரி உங்கள் வாழ்க்கை துணையோடு இணைந் திருக்கும்படி நேரம் ஒதுக்கி அவரோடு செலவு செய்யுங்கள். நீங்கள் அவரோடு இசைந்த ஆத்துமாவாகவும், ஒரே மாம்சமாகவும், ஆவியில் ஒருமனப்பாட்டோடு இருக்கும்படி இணைக்கப் பட்டிருக்கறீர்கள் என்பதை நினைவில் வையுங்கள்.

ஒரு போதும் உங்களுக்கும், உங்கள் துணைக்கும் இடையில் மூன்றாம் நபரின் நுழைவு இருக்க அனுமதிக் காதீர்கள். கணவரிடம் கோபித்துக் கொண்டு தாங்கள் பேச வேண்டிய செய்தியை பிள்ளைகளிடம் சொல்லி அனுப்பி பிள்ளைகளை தகவல் தொடர்பு மந்திரிகளாக பதவி பிராமணம் செய்து வைக்கும் சிலரை பார்த்திருக்கிறேன்.

இது ஒரு வேலை அந்த சமயத்தில் நன்றாய் இருக்கலாம். ஆனால் உங்கள் இடைவெளியை கண்டு கொள்ளும் பிள்ளைகள் அவர்கள் வளரும் போது இதை தங்கள் தப்பிதங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட ஆபத்துகள் சில குடும்பங்களில் அரங்கேறி உள்ளது.

நாம் பெற்ற பிள்ளைகளே நமது இடைவெளியை பயன்படுத்தி கொள்ளுகிறார்கள் என்றால் பிசாசு சும்மாவாகவா இருப்பான்? ஆகவே அன்பானவர்களே பிள்ளையாய்



இருந்தாலும், பேயாக இருந்தாலும் ஆபத்து ஆபத்துதான் இசைந்து இருங்கள்.

வேறுப்பட்ட கருத்துக்கள் இல்லாத குடும்பங்களை நம்மால் பார்க்கவே முடியாது. ஆனால் உங்கள் சகோதரியாக தாழ்மையாய் ஒரு வார்த்தையை பதிவு செய்கிறேன். அதி விரைவில் அந்த வேறுபாட்டை விரட்டி அடியுங்கள். சூரியன் அஸ்தமிப்பதற்குள் உங்கள் கோபம் தனியட்டும். இடைவெளி இல்லாமல் இசைந்து இருக்க உங்களை வாழ்த்துகிறேன்.

இதை வாசிக்கும் போது ஒரு வேளை உங்கள் கணவரோடு உங்களுக்கு நல்மனம் இல்லாமல் இருக்குமானால் தேவ ஆலோசனைக்கு கீழ்படியுங்கள். அப்பொழுது இடைவெளியை விரட்டி அடிப்பீர்கள். சமாதானத்தின் தேவன் உங்கள் குடும்பத்தை கட்டுவாராக.

கர்த்தர் எங்களுக்கு நல்ல சபையை கொடுத்திருக்கிறார். அநேக பெண்கள் எங்கள் சபையில் ஊழியம் செய்கிறார்கள். சில சமயங்களில் தங்கள் மனைவி ஊழியம் செய்வதை கணவர் விரும்பாத சூழ்நிலை கூட வந்திருக்கிறது. அப்படிபட்ட பெண்கள் அழுகையோடு கூட என்னிடத்தில் வருவார்கள்.

ஊழியம் செய்ய கூட எங்களுக்கு சுதந்திரம் இல்லையா? என்று கேட்பார்கள். அப்பொழுது நான் அவர்களுக்கு சொல்வதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உங்கள் கணவர் உங்களை தடை செய்வதினால் அவரை சத்துரு என்றோ, பிசாசு அவரை ஏவுகிறான் என்றோ சொல்லிவிடாதீர்கள்.

மக்களுக்கு உங்கள் ஊழியம் தேவைப் படுவதை விட உங்கள் வீட்டிற்குள் மிக அதிகமான ஊழியத்தை உங்களுக்கு கர்த்தர் வைத்திருக்கிறார் என்று உணர்ந்து கொள்ளுங்கள். நாள் வரும் அப்பொழுது உங்கள் குணம் உள்ள நடக்கையினால் உங்கள் கணவர் மாற்றப்படுவார். அப்பொழுது அவரே நீங்கள்

ஊழியம் செய்வதற்கு உங்களுக்கு உதவியாய் இருப்பார்.

இந்த ஆலோசனையை கேட்ட சிலர் தங்கள் குடும்ப வாழ்க்கையில் இன்று ஆசீர்வாதமாய் இருக்கிறார்கள். தேவ கிருபையில் இன்றைக்கு ஊழியத்தில் குடும்பமாய் பயன்பட தொடங்கிவிட்டார்கள்.

அருமையானவர்களே! இதை வாசிக்கும் நீங்கள் ஊழியம் செய்பவராக இருக்கலாம், நீங்கள் ஊழியம் செய்வதினால் உங்கள் கணவர் உங்களை ஏற்றுக்கொள்ளாத நிலை ஏற்பட்டிருக்கலாம், இந்த வார்த்தையை தான் நான் உங்களுக்கும் சொல்கிறேன்.

உங்கள் குடும்பத்தில் கர்த்தர் உங்களுக்கு மிகப்பெரிய ஊழியத்தை வைத்திருக்கிறார், அந்த ஊழியத்தை செய்வதற்கு உங்களை ஒப்புக் கொடுத்து, ஜெபத்தில் தரித்திருங்கள். அய்யோ! என்ன இது செய்கிற ஊழியத்தை நிறுத்துவதா? என்று அதிர்ந்து போகாதிருங்கள். இப்படி செய்து பாருங்கள்.

இது உங்கள் வருங்கால ஊழியத்திற்கு உரமாய் இருக்குமே தவிர உங்களை ஊனமாய் மாற்றாது. நிச்சயமாய் சொல்லுகிறேன். நீங்கள் வரும் காலத்தில் குடும்பமாய், ஆசீர்வாதமாய் இருப்பீர்கள்.

## 2) துணிச்சல் உள்ள தெபொராள் :-

''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' என்ற சொற்றொடரின் முந்தின பகுதி தெபொராளின் வாழ்க்கையில் மிக அருமையாக பொருந்துகிறது. தேவனுடைய சித்தமாகிய வெற்றியை இஸ்ரவேலர் அடைவதற்கு தெபொராளின் பங்கு மிக பிரதானமானது. குறிப்பாக இதில் தெபொராளின் துணிவு நம்மை அசந்து போக வைக்கிறது.



தெபொராள் பாராக் என்னும் யுத்த தளபதியை நோக்கி (நியாதி 4:6,7) யுத்த புருஷர்களை அழைத்துக் கொண்டுபோ. கர்த்தர் சத்துருவையும் (சிசெரா) அவர்கள் இரதங்களையும் உன் கையில் ஒப்புக் கொடுப்பேன் என்று சொல்லவில்லையா? என்றாள் அதற்கு பாராக்கின் பதிலை பாருங்கள் (நியா 4:8) நீ என்னோடே வந்தால் போவேன்... வராவிட்டால், போகமாட்டேன். ஆஹா, என்ன வார்த்தை இது!

ஒரு ஆண், யுத்த புருஷன் யுத்தத்தை முன் நின்று நடத்தும் தளபதி அவர் சொல்லும் வார்த்தை படு ஆச்சிரியத்தை உண்டாக்குகிறது. நீ எங்களோடே வர வேண்டும். தெபொராளின் துணிவு எல்லாருடைய உள்ளத்தையும் தைரியப்படுத்துக்கிறது. அதற்கு தெபொராள் நான் வருகிறேன் என்று வாக்கு கொடுக்கிறாரே... என்ன ஒரு துணிச்சல் இருக்க வேண்டும்! யோசித்துப் பாருங்கள்.

அதிலும் இந்த துணிவை கர்த்தருக்காக பயன்படுத்தினது மிக சிறப்பான ஒன்று. அரசியலில் தமிழகத்திலும், இந்தியாவிலும், உலகத்திலும் துணிவோடு செயல்படும் பெண்கள் பல உண்டு.

ஆனால் தங்கள் துணிவை ஆண்டவருக்காக பயன்படுத்தும் பெண்கள் மிகக்குறைவு. இன்றைய திருச்சபைகளுக்கும் ஊழியங்களுக்கும் தங்கள் துணிவை கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்கு பயன்படுத்தும் தெபொராக்கள் தேவை.

யேசபேல் என்ற பெண் துணிச்சல் உள்ளவள் ஆனால் அவளது துணிச்சலை ஆண்டவரின் பிள்ளைகளுக்கு எதிராக பயன்படுத்தினாள். யேசபேலின் புருஷன் ஆகாப் ராஜா. ஆகாப் ராஜாவே சோர்ந்து ஒரு நாள் கட்டிலில் படுத்துக்கிடக்கிறான். அவ்வளவுதான் அதை கண்ட யேசபேல் அவன் சோகத்தின் காரணத்தைக் கேட்டு அறிந்தாள். ஆகாப் திராட்சைத்

தோட்டத்தைக் கேட்டபோது பரிசுத்தவானாகிய நாபோத் தன் திராட்ரைத் தோட்டம் தன் பிதாக்களின் சுதந்திரம் என்பதால் தனக்கு வேண்டுமென்று சொல்லிவிட்டான். இது தான் ஆகாபின் சோகத்திற்கு காரணம்.

அதற்கு யேசபேல் செய்த காரியத்தைப் பாருங்கள்! பரிசுத்தவானுக்கு (நாபோத்துக்கு) எதிராக கடிதம் எழுதி, ஆட்களை எழுப்பி, உபவாசம் (ஊழியம்) என்ற பெயரிலேயே அவனை கொன்று தீர்த்து விட்டாள்.

கர்த்தருடைய ஊழியம் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பரிசுத்தவான்களைக் குறித்து தவறுதலாக பேசுவதும், சாட்சி என்ற பெயரில் சங்கடங்களை உண்டாக்குவதும், ஊழியம் என்ற பெயரில் பலரை ஊனம் ஆக்குவதும் மோசமான பாவம், இவைகள் ஒரு பெரும் குற்றம். இப்படிப்பட்டவர்களிடம் மிக கவனமாக இருங்கள்.

இன்னொரு முறை எலியாவே யேசபேலுக்கு பயந்து ஓடினான். இந்த யேசபேல் தன்னுடைய துணிவை பரிசுத்தவான்களுக்கு எதிராகவும், ஊழியர்களைக் கலங்கடிக்கவுமே பயன்படுத்தினாள்.

அருமையானவர்களே! இன்றைக்கும் ஆவிக்குரிய உலகத்தில்(!!) சில பேர் தங்கள் துணிவை சபையை கலங்கடிக்கவும், ஊழியரை பயப்படுத்தவும், தங்கள் சொந்த கணவனை தொடை நடுங்கியாக்கவும் ஊழியங்களை உடைக்கவுமே பயன்படுத்துகிறார்கள்.

உங்களுக்கு இருக்கும் துணிவை கர்த்தருக்காக பயன்படுத்த கர்த்தர் கிருபை செய்வாராக. இந்த துணிவு துணிகரமாய் மாறாமல் இருக்க 'ஜெபத்தோடு எப்பொழுதும் ஜாக்கிரதையாய் இருங்கள்'.



## ३) தீர்க்கதரிசியாகிய தெபொராள் :-

பழைய ஏற்பாட்டில் மிரியாம், தெபொராள், உல்த்தாள், ஏசாயாவின் மனைவி, நோவதியாள் என தீர்க்கதரிசிகள் இருந்திருக்கிறார்கள். இதில் தெபொராள் மிக விசேஷமானவர். தெபொராள் என்றும் தீர்க்கதரிசியைக் குறித்து வேதம் சொல்லும் வார்த்தையைக் கவனித்துப் பாருங்கள்.

''தெபொராள் என்னும் தீர்க்கதரிசி... நியாயம் விசாரித்து வந்தாள்''. (நியாயா 4:4) ஜனங்களுக்குள் வரும் சலசலப்புகள் பிரச்சனைகள் ஆகியவைகளை விசாரித்து, சமாதானப்படுத்தி, சரிசெய்வதற்கு பெயர்தான் நியாயம் விசாரித்தல். இந்த தீர்க்கதரிசிக்காக மெய்யாகவே கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

இவர்மேல் இருந்த தீர்க்கதரிசன அபிஷேகம் குடும்பங் களைக் கட்டி இருக்கிறது. தேசத்தை ஒன்றிணைத்து இருக்கிறது. இங்கு தீர்க்கதரிசிகளுக்கு ஒரு வார்த்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய வார்த்தையும், நம்மேல் உள்ள அபிஷேகமும் குடும்பங்களையும் சபைகளையும் கட்டி எழுப்ப வேண்டியது அவசியம்.

தேவனுடைய கிருபையால் கடந்த 30 ஆண்டுகளாக அவருடைய ஊழியத்தை செய்கிறேன். இந்த நாட்களில் அநேக தீர்க்கதரிசிகளை கண்டு இருக்கிறேன். அவர்களில் சிலர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் இன்றும் என் உள்ளத்தில் நெருடல்களை உண்டாக்குகிறது.

காரணம் சில தீர்க்கதரிசிகள் (?) சொன்ன தீர்க்கத் தரிசனத்தால் நன்றாய் இருந்த குடும்பம் உடையும் அபாய நிலைக்கு போயிருக்கிறது. சில குடும்பங்கள் உடைந்தே போயிருக்கிறது. சில ஆத்துமாக்கள் பின்மாற்றத்தில் போயிருக்கிறார்கள்...

வேதத்தில் ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சவுல் என்ற மனுஷன் கழுதையை தேடிக்கொண்டு போனான். தீர்க்கதரிசியை சந்தித்த போதோ ராஜ அபிஷேகத்தைப் பெற்றவனாக திரும்பி வந்தான்.

ஆனால் சமீப காலங்களில் சில இடங்களில் இது தலை கீழாக நடக்கிறது. தங்களுக்கு உள்ள பரிசுத்தத்தையும், இரட்சிப்பையும், அபிஷேகத்தையும், ஜனங்கள் இழக்கிறார்கள். இப்படி எழுதுவதால் தீர்க்கத்தரிசனத்திற்கு எதிரானவள் என்று நினையாதீர்கள். நான் தீர்க்கதரிசனத்தை விசுவாசிப்பவர் நானும் தீர்க்கதரிசனம் உரைப்பவர் என்பதை தாழ்மையாக சொல்லிக் கொள்கிறேன்.

இனியவாசகரே! உங்களுக்கு இருக்கும் சில ஐக்கியம் ஆவிக்குரியதை போன்று தெரிந்தாலும் அவைகளால் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை இறங்கு முகத்தில் இருக்குமென்றால், அவர்களால் உங்கள் குடும்பத்தில் குழப்பங்கள் வருமென்றால் மிகவும் ஜாக்கிரதையாய் இருங்கள் இது சிலருக்கு எச்சரிப்பின் வார்த்தை.

இதை வாசிக்கும் நீங்கள் ஊழியம் செய்கிறவர்களாய் இருப்பீர்கள் என்றால் உங்களுக்கு சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

உங்களோடு கூட இணைபவர்கள், உங்களிடத்தில் வருபவர்கள், உங்களைப் பார்க்கும் போது ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு படி கூடும்படி நம்முடைய வாழ்க்கையும், வார்த்தையும் அமையட்டும் நம்மிடத்தில் வருபவர்கள் திரும்பி போகும் போது அபிஷேகத்தில் வளரவேண்டும் என்ற ஏக்கம் நம்மிடத்தில் இருக்கட்டும்.

சிலரெல்லாம் அவரை தேடி விசுவாசிகள் வந்தால் தேன் மிட்டாய் செய்வதில் ஆரம்பித்து தேவையில்லாத



சங்கதியெல்லாம் பேசி முடித்து அனுப்புவார்கள். அது அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் எதிர்மறையான விளைவை உண்டாக்கும் கவனமாய் இருங்கள். நம்முடைய ஜனங்களின் குடும்பங்கள் கட்டப்படுவதாக!! அவர்களின் அபிஷேகம் கூடுவதாக!! வாழ்க்கை ஆண்டவரை நெருங்குவதாக!!

## துதிக்கும் தெபொராள்

தீர்க்கத்தரிசியாகிய தெபொராள் துணிச்சல் உள்ளவள் மட்டுமல்ல துதிக்கும் மனமுடையவளும்கூட. தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள். தேவனாகிய கர்த்தர் நம்மை சிருஷ்டித்ததின் நோக்கம் அவர் துதியை உயர்த்தி சொல்வதற்காகத்தான்.

துதியினால் தடைகள் உடையும், அற்புதங்கள் நடக்கும், ஜெயம் உண்டாகும் என அடுக்கடுக்காய் அநேக காரியங்கள் நமக்கு தெரியும், புரியும். ஆனால் குறிப்பாக தெபொராளின் வாழ்க்கையில் ஒரு குறிப்பட்ட வசனம் என் சிந்தையை சற்று ஆழமாய் சிந்திக்க வைத்தது.

(நியா 5:31) கர்த்தாவே... என்று பாடினார்கள். பின்பு தேசம் நாற்பது வருஷம் அமைதலாய் இருந்தது. இங்கு தெபொராள் ஜெயம் பெற்ற பின்பு துதிக்கிறாள் அப்பொழுது தேசம் அமைதலாய் இருந்தது.

இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் யுத்தமில்லாமல் சமாதானமாய் இருந்தது. பார்த்தீர்களாக அருமையானவர்களே! துதி நமது சத்ததுருக்களின்மேல் ஜெயத்தை மட்டுமல்ல சத்துருவே இல்லாத சமாதான வாழ்க்கையை அனுபவிக்க செய்யும்.

இதை வாசிக்கும் நீங்கள் போராட்டமான சூழ்நிலையில் கடந்து போகலாம், சத்துருக்களால் சூழப்பட்ட நிலையில் இருக்கலாம், உங்கள் வீட்டாரே சத்துருக்களாய் மாறினதின் நிமித்தம் மனமுடைந்து போயிருக்கலாம்.

இந்த சூழ்நிலையில் உங்கள் மனதை திடப்படுத்திக் கொண்டு சொல்லுங்கள். கர்த்தரை நான் எ(இ)க்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன் அவர் துதி எ(இ)ப்போதும் என் வாயிலிருக்கும். மலைபோல் இருக்கும் உங்கள் சூழ்நிலை வல்லவரின் மகிமையினால் சமபூமியாக மாறும்.

உங்கள் சகோதரியாய், தேவனுடைய ஊழியக்காரியாய் ஒரு வார்த்தையை கர்த்தரின் நாமத்தில் சொல்லுகிறேன். நீங்கள் கர்த்தரை துதிக்க ஆரம்பிக்கும் இதே நேரம் கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்ய துவங்குவார்.

ஆகவே நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். இடைவிடாமல் துதியுங்கள் இன்னும் கொஞ்ச நாளில் கர்த்தர் சத்துருவை நீங்கள் தேடியும் காணாதிருக்கும்படிக்கு சமாதான வாழ்வை கட்டளையிடுவார்.

அதே சமயத்தில் ஒரு குறிப்பட்ட காரியத்தை சற்று அழுத்தமாய் சொல்ல விரும்புகிறேன். கர்த்தர் ஒருவரே துதிக்கு பாத்திரர். நீங்கள் அவர் துதியை சொல்லவே அழைக்கப் பட்டிருக்கிறீர்கள் அதில் உறுதியாய் இருங்கள்.

கோலியாத் இஸ்ரவேலரை யுத்தத்திற்கு அழைத்து பயப்படுத்திக் கொண்டிருந்தான். அந்த சமயத்தில் தேவனுடைய நாமத்தினாலே தாவீது கோலியாத்திற்கு எதிர்த்து நின்று வெற்றி கொண்டான். அப்பொழுது ஸ்திரீகள் பாடின பாட்டு என்ன தெரியுமா?



''சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம்'' இந்த பாடல் சவுலுக்கு விசனமாய் இருந்தது. இதுநிமித்தம் சவுல் எரிச்சல் அடைந்தான். பின்பு இருவருக்கும் இடையே நடந்த நெடுநாள் யுத்தத்தை நாம் நன்கு அறிவோம்.

சகோதரிகளே! கவனியுங்கள் நாம் கர்த்தரை துதித்தால் நமக்கு சமாதானம் மனுஷனை துதித்தால் சங்கடம். ஆகவே மிக கவனமாய் இருப்போமாக. இதுவரைக்கும் மனித துதி பாடுகிறதை வழக்கமாக கொண்டிருப்போமானால் இன்றோடு விட்டுவிடுவோம் அப்பொழுது சமாதானம்.

தேவன் சில கிரியைகளை செய்ய தம் தாசர்களை பயன்படுத்துகிறார். பயன்படுகிறவர்கள் ஒரு கருவிதான். துதிக்கு - பாத்திரர் கர்த்தர் மட்டுமே. பரிசுத்தவான்களை கனம் பண்ணுவது நல்லது. அவர்களை குறித்து நற்சாட்சி சொல்லுவது மிகவும் நல்லது.

ஆனால் அவைகளை எல்லை தாண்டாமல் பார்க்க வேண்டியது அவசியம். என் துதியை வேறொருவனுக்கும் என் மகிமையை விக்கிரங்களுக்கும் கொடேன் என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார்.

அவர் ஒருவருக்கே துதியும், மகிமையும் உண்டாவதாக. அதே சமயத்தில் துதிக்கிறவர்கள் வாழ்க்கையில் வரும் இன்னொரு சோதனையையும் நான் குறிப்பட விரும்புகிறேன்.

மிரியாமின் வாழ்க்கையை சற்று பாருங்கள் செங்கடலை இஸ்ரவேல் ஜனங்கள் கடந்தபொழுது மிரியாம் தம்புருவோடு கர்த்தரை துதித்து பாடினார் என்பதை நாம் அறிவோம்.

தேவ ஜனம், தேவனை துதிப்பதற்கு முன் நின்ற இந்த பெண்மணி சில காலம் கழித்து தேவனுடைய தாசனாகிய மோசேக்கு எதிராக பேசவும் முன் நின்றார். அங்கே தேவ

கோபத்திற்கு ஆளானார்.

சிலசமயங்களில் தேவனை துதிக்கும் நமது நாவுகளினாலே தேவனுடைய ஊழியர்களுக்கு எதிராகவும், ஊழியத்திற்கு எதிராகவும், ஏன் தேவனுக்கே எதிராகவும் பேசும்படிக்கு சோதனை நேரிடலாம். அதை மிக சரியாய் கையாள்வது அவசியம். இதே சோதனையில் தான் பிசாசும்கூட விழுந்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஆலயத்திலும் ஆராதனையிலும் முன் நின்று நடத்துபவர்களுக்கு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீங்கதான் Sister முன்னாடி நிக்கறீங்க எங்க முன்னோடி நீங்கதான் அதினால் நீங்க கேளுங்க என்று ஊழியருக்கு விரோதமாக எழும்ப சில விஷமிகள் உங்களை உசிப்பிவிடலாம்.

மிக கவனமாய் இவைகளை கையாண்டு உங்களை அழைத்த தேவனுக்கும், நடத்தும் ஊழியருக்கும் உண்மையாய் இருங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வில் சமாதானம் பெருகும்.

1) தேவனுக்கே மகிமை செலுத்துங்கள்

2) துதிக்கு முந்துங்கள் கலகத்திற்கு பிந்துங்கள்

3) தேவனை துதித்து சமாதானத்தோடே வாழுங்கள்

## தாயாகிய தெபொராள்

தெபொராளின் பாடலில் இருக்கும் வார்த்தையை பாருங்கள். நான். . . இஸ்ரவேலிலே தாயாக எழும்புமளவும் கிராமங்கள் பாழாய் போயின.

தெபொராள் தாயாய் எழும்புமளவும் கிராமங்கள் பாழாய் போயின. அவள் எழும்பன பின்போ அவைகள் வளம்பெற்றன சமாதானமாய் இருந்தன. அல்லேலூயா! இந்த வார்த்தையை



எழுதும்போது என் இதயம் கர்த்தரை நோக்கி துதிக்கிறது. என் தேவனை நோக்கி ஜெபிக்கிறது. கர்த்தாவே எங்கள் தேசத்தில் அநேக தெபொராக்களை எழுப்புவீராக. அப்பொழுது எங்கள் தேசம், கிராமங்கள், ஊழியங்கள் இனி ஒருபோதும் பாழாய் போகாமல் வளம் நிறைந்ததாக இருக்கும்.

வேதத்தில் இருக்கும் ஒரு சம்பவத்தை குறிப்பட்டு ஒரு தாயின் குணங்களை பற்றி சில குறிப்புகளை இங்கு எழுதுகிறேன். சாலமோன் நாட்களில் நடந்த சம்பவம் அது (1 இரா 3:16). புதிதாய் பிரசவித்த இரண்டு பெண்கள் ஒரே வீட்டில் இருக்கிறார்கள்.

இரவில் ஒருத்தி புரண்டு படுத்த போது ஒரு குழந்தை மரித்து போய்விட்டது. அப்பொழுது அவள் பிள்ளையை மாற்றிவிட்டாள். காலையில் பால் கொடுக்க எழும்பினபோது மற்றொரு ஸ்திரீ இதை கண்டுபடித்துவிட்டாள். ராஜாவிடம் வழக்கு வந்தது. இருவரும் மாறிமாறி உயிரோடு இருக்கும் பிள்ளை என்னுடையது என்றார்கள். சாலமோன் தீர்ப்பு சொல்கிறார்.

இந்த பிள்ளையை பட்டயத்தை உருவி இரண்டாக பிளந்து இருவருக்கும் கொடுத்துவிடு என்றார். அந்த சமயத்தில் உண்மை தாய் ஐயா! என் பிள்ளை உயிரோடிருக்கட்டும் என்றாள். அப்பொழுது ராஜா அவளே உண்மை தாய் என்று குழந்தையை அவளிடம் ஒப்படைத்தார்.

இந்த சம்பவத்தில் ஒரு தாயிடம் இருக்க வேண்டிய மூன்று குணங்களை சொல்கிறேன் கவனியுங்கள் :-

### 1) புரளாதிருப்போமாக :-

அந்த தாய் புரண்டதினால் அந்த குழந்தை செத்து போயிற்று. கர்த்தர் நம்மை நம்பி குழந்தையை

கொடுத்திருக்கிறார். ஊழியத்தை கொடுத்திருக்கிறார். இவைகள் பாழாய் போகாமல் இருக்க வேண்டுமென்றால் நாம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சரி, அந்தரங்க வாழ்க்கையிலும் சரி தடம் புரளாதிருக்க வேண்டியது அவசியம்.

நாம் புரளுவோமென்றால் கர்த்தர் நம் கையில் கொடுத்ததை இழந்து போவோம். இதை வாசிக்கும் நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் நிலை தடுமாறி கொண்டிருக்க லாம். உங்கள் ஒப்புக்கொடுத்தலில் திசைமாறிக் கொண்டிருக்க லாம். அழைப்பில் தடம் மாறிக் கொண்டிருக்கலாம்.

இப்பொழுதே கர்த்தரின் ஒத்தாசையை சார்ந்து கொண்டிருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை நிலைநிற்க பண்ணுவார். உங்கள் குடும்பமும், ஊழியமும் காக்கப்படும்.

### 2) பாலூட்டுவோமாக :-

இந்த தாய் காலையில் பாலூட்ட எழுந்தபோது தன் குழந்தையைப்பற்றி புரிந்து கொண்டாள். வேதம் சொல்லுகிறது திருவசனம் என்னும் கலங்கமில்லாத ஞானப்பால் (பேதுரு). உங்கள் பிள்ளைகளுக்கு Complan ஊட்டினாலும், Horlicks ஊட்டினாலும் நல்லதுதான். அதைவிட முக்கியமானது கர்த்தருடைய வசனத்தை ஊட்டி வளர்ப்பது.

வசனத்தின்படி பிள்ளையை வளர்க்கும் பெற்றோர் களுக்காக மெய்யாக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அதே சமயத்தில் வசனத்தை ஊட்டியும் பிள்ளையை வளர்க்க வேண்டும் என்பதை மனதில் வையுங்கள்.

ஏனென்றால் வசனத்தின்படி வளர்த்தால் அவர்களுடைய வாழ்க்கை நேராய் இருக்கும். வசனத்தை ஊட்டி வளர்த்தால் அவர்கள் வாழ்க்கை என்றைக்கும் இயேசுவில் நிலைநிற்கும். இதை திரும்ப வாசித்து பாருங்கள் அப்பொழுது இதனுள்



இருக்கும் ஆழம் உங்களுக்கு புரியும். புரிகிறது ஆனால் புரியவில்லை என்பது போல் இருக்கிறதா? வாருங்கள் சொல்லுகிறேன்!!!

வசனத்தின்படி வளர்ப்பதென்பது நீங்கள் வசனத்தை புரிந்து கொண்டு அதன்படி பிள்ளையை வளர்ப்பது. அப்பொழுது அவர்கள் ஒழுக்கமாய் இருப்பார்கள். வசனத்தை ஊட்டி வளர்ப்பதென்பது உங்களுக்குள் இருக்கும் வசனத்தை உங்கள் பிள்ளைகள் புரிந்து கொள்ளும்படி அவர்களுக்குள் பதிய வைப்பது.

அப்பொழுது உங்கள் பிள்ளைகள் நீங்கள் வளர்த்த விதத்தின் ஒழுக்கத்தை மட்டுமல்ல தேவன் விரும்பும் ஒழுக்கத்தில் ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டே இருப்பார்கள். இன்னும் சொல்லவேண்டுமென்றால் உங்கள் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உங்கள் பிள்ளைகளின் சமாதானம் உங்களுக்கு பெரிதாய் இருக்கும்.

ஒரு காலத்தில் பைபிள் படித்தால்தான் சாப்பாடு என்ற கட்டாய சூழல் கிறிஸ்தவ குடும்பங்களில் ஒழுங்குமுறையாய் இருந்தது. ஆனால் இந்த காலத்தில் சில குடும்பங்களில் பெற்றோர் பைபிள் படிப்பதே பெரிய விஷயமாய் இருக்கிறது.

சில நல்ல விலையேறப்பெற்ற அனுபவங்கள் மறைந்து கொண்டு வருகிறது. எப்படியும் நீங்கள் வேதத்தை நேசியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்குள் வசனத்தை ஆழமாய் விதையுங்கள். அப்பொழுது அவர்கள் வாழ்க்கை என்றைக்கும் கர்த்தருக்குள் நிலைநிற்கும்.

### 3) தியாகம் செய்வோமாக :-

ராஜா சொல்லும் முடிவை பாருங்கள். இதை பிளந்து கொடுத்துவிடு அப்போது அந்த தாயின் பதில் ஆண்டவனே

கொல்ல வேண்டாம் அது அவளிடத்திலேயே இருக்கட்டும். பார்த்தீர்களா? ஒரு தாய் தன் பிள்ளை வாழ வேண்டுமென் பதற்காக தன் உரிமையை தியாகம் செய்ய ஆயத்தமாய் இருக்கிறாள்.

அருமையானவர்களே! கர்த்தர் நம் கையில் கொடுத்திருக்கும் ஊழியம் அழியாமல் இருக்க இப்படிப்பட்ட தியாகம் பல சமயங்களில் தேவைப்படுகிறது. அது உங்கள் சுகபோக வாழ்வாய் இருக்கலாம், தூக்கமாக இருக்கலாம், உரிமையாய் இருக்கலாம், மரியாதையாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

சிறிய காரியமோ, பெரிய காரியமோ தியாகம் செய்ய நமது மனம் பக்குவப்பட வேண்டியது அவசியம். தியாகமில்லாமல் தாய் என்ற ஸ்தானத்தை அடையவே முடியாது. தியாகம் செய்யுங்கள். தாயாக இருங்கள். கர்த்தரின் கிருபை உங்களை தாங்குவதாக.

# 5

# அபிகாயில்

சிலரின் பெயருக்கும், வாழ்க்கைக்கும் சம்பந்தமே இருக்காது. அன்பு என்று பெயர் இருக்கும். ஆனால் வம்பு ஒன்றே அவர்களுக்கு தெரியும். அப்படித்தான் அபிகாயிலின் வாழ்க்கையும். அபிகாயில் என்றால் மகிழ்ச்சி என்று அர்த்தம். அவள் வாழ்க்கையோ ஒரு முரடனோடே அமைந்துவிட்டது. வேதம் சொல்லுகிறது அவன் ஒரு துராகிரதம் பிடித்தவன்.

பின்பு அவள் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று நீங்களே கற்பனை செய்து பாருங்கள். இப்படிப்பட்ட இக்கட்டில் சிக்கிக்கொண்ட இவளது வாழ்க்கையையும் மகிழ்ச்சியானதாக நமது ஆண்டவர் மாற்றிவிட்டார் அல்லேலூயா!

இதை வாசிக்கும் உங்கள் வாழ்க்கையும் இப்படிப்பட்ட அனுபவத்தில் இருக்கலாம். என் பெற்றோர் ஜெபத்தோடு நல்ல பெயரைத்தான் வைத்தார்கள் ஆனால் என் வாழ்க்கை நன்மையாய் இல்லை. ஆசீர்வாதமாக இல்லை. செழிப்பாக இல்லை, சமாதானமாக இல்லை என்று கண்ணீரோடு புலம்பி கொண்டிருக்கலாம். அல்லது என் பிள்ளைகளின் பெயருக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தமே இல்லை என்று கலங்கி கொண்டிருக்கலாம்.

உங்களுக்கு ஒரு ஆண்டவர் இருக்கிறார் அவர் யார் தெரியுமா? உங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாய் மாற்றுகிறவர். உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையை ஆனந்தம் ஆக்குகிறவர். உங்கள் நிகழ்கால சூழ்நிலையை அவர் மாற்றிப்போடுவார். நிகரற்றவர்களாய் உங்களை இந்த பூமியிலே வைப்பார்.

ஆகவே தற்கால சூழ்நிலையைக் கண்டு கலங்கி விடாதீர்கள். உங்கள் காலம் கர்த்தரின் கையில் இருக்கிறது என்று விசுவாசியுங்கள். உங்கள் பெயரும் வாழ்வும் தேவனை மகிமைப்படுத்துவதாக. இதற்கு கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக. மகிழ்ச்சியுள்ளவளாக மாற்றப்பட்ட அபிகாயி லின் வாழ்க்கையில் இருக்கும் மூன்று நற்குணங்களை உங்களுக்கு முன்பாக வைக்கிறேன்.

### 1. மகா புத்திசாலியான அபிகாயில்

(1சாமு 25:3) வேதம் அவளை குறித்து சொல்லும் முதல் வார்த்தையே மகா புத்திசாலி. அபிகாயிலின் கணவர் நாபாலிடத்தில் தாவீது ஆட்களை அனுப்புகிறார். தாவீதின் ஆட்கள் வாழ்த்துக்கள் சொல்லி சுக செய்தி விசாரித்து தாவீதின் பெயரிலே உதவி கேட்கிறார்கள். கடந்த காலத்தில் தாவீதின் ஆட்கள் நாபாலின் வேலை ஆட்களுக்கு பாதுகாப்பாய் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் நாபாலோ தூஷணமாய் பேசி அவர்களை அனுப்பிவிடுகிறான். இதனிமித்தம் தாவீது படைசூழ மிகுந்த கோபத்தோடு நாபாலை எதிர்க்க ஆயத்தமாகிறார்.

இது ஒருபுறம் நடக்க மறுபுறம் செய்தி அபிகாயிலை வந்து எட்டுகிறது. இதைக் கேட்ட உடனே அபிகாயில் எடுத்த நடவடிக்கை தாவீதின் கோபத்தை அப்படியே மாற்றிப் போட்டது.



தனது கணவன் நாபாலின் மனநிலையில் அபிகாயிலும் இருந்திருப்பாளானாள், அன்றைக்கே அவளுக்குண்டான அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கும். இவளோ புத்திசாலியாய் இருந்தபடியால் அழிக்கப்பட வேண்டியவைகள் காக்கப்பட்டது.

அருமையானவர்களே! நம்முடைய குடும்பம் காக்கப்பட, நமக்குண்டான ஆசீர்வாதங்கள் பாதுகாப்பாய் இருக்க புத்திசாலியாய் நடந்து கொள்ளவேண்டியது அவசியம். ''புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டை காட்டுகிறாள் புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள். (நீதி 14 : 1)''

இன்றைய ஆவிக்குரிய உலகத்தில் சில குடும்பங்களின் ஆசீர்வாதங்கள் அழிந்து போவதற்கும், இடிந்து போவதற்கும் காரணமென்ன? சில குடும்பங்களில் பக்தி மிகவும் அதிகமாய் இருக்கிறது. பக்தி இருக்கும் அளவுக்கு புத்தியில்லாததுதான்.

அருமையான சகோதரிகளே! உங்கள் குடும்பம் கட்டப்பட ஆண்டவரிடம் புத்தியைக் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள். புத்திசாலியாய் நடந்து கொள்ளுங்கள்.

புத்திசாலியாய் இருந்த அபிகாயிலின் வாழ்க்கையை சற்று உன்னிப்பாய் கவனித்தால் இவள் புத்திமதியை கேட்கிறவளாய் இருந்திருக்கிறாள். (1 சாமு 25:14,17) ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். தாவீதின் ஆட்கள் வந்து போன சங்கதியை வேலைக்காரன் ஒருவன் சொல்லுகிறான்.

அதே வேலைக்காரன், செய்யவேண்டியதை பாரும் என்றும் ஆலோசனை சொல்லுகிறான். நீ என்ன எனக்கு சொல்வதென்றும், நான் என்ன கேட்பதென்றும் நினையாமல் அவன் சொன்ன புத்திமதியை இந்த அபிகாயில் கேட்டிருக்கிறாள். இங்கே ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

புத்திசாலியாய் இருக்க வேண்டுமானால் புத்திமதியை கேட்டுத்தான் ஆகவேண்டும்.

சிலரெல்லாம் தங்களை புத்திசாலியாய் நினைத்துக் கொண்டு யார் புத்திமதியை சொன்னாலும் ஏற்றுக் கொள்ளமால் போவார்கள். அப்படி இருப்போமானால் நாம் இழப்புக்குரியவர்களாக மாறி விடுவோம். இது சிலருக்கு எச்சரிப்பான வார்த்தை. புத்திமதியை கேட்பவர்களாய் இருப்போமானால் மீட்டுக் கொள்பவர்களாய் இருப்போம்.

இளம் பிள்ளைகள், இப்போதுதான் வாழ்க்கையை துவங்கி இருக்கிறவர்களுக்கு சில வார்த்தைகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

உங்கள் தாய், தகப்பன், மாமனார், மாமியார் சொல்வதை கொஞ்சம் கேட்டு பழகுங்கள். அது தற்காலத்தில் சிலவேளை கசப்பாக இருந்தாலும் பிற்காலத்தில் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். மகனே உன் தகப்பன் புத்தியை கேள். உன் தாயின் போதகத்தை தள்ளாதே. (நீதி 1:8).

## 2. கோபம் தனிய பேசும் அபிகாயில்

தாவீது நாபாலின் மேல் மிகுந்த கோபத்துடனே வந்து கொண்டிருக்கிறார். அபிகாயில் தாவீதை வழியில் சந்திக்கிறார் அபிகாயில் பேசின வார்த்தைகள் தாவீதின் கோபத்தை அப்படியே முற்றிலுமாய் தணித்துப் போட்டுவிட்டது.

''வரும்போது முடித்துவிடுவேன்'' என்று சொல்லிவிட்டு வந்தவர் போகும் போது இரத்தம் சிந்தாதபடிக்கு நீ என்னை தடுத்தாய், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று அறிக்கை பண்ணுகிறான்.

இந்த அனுபவம் சகோதரிகளுக்கு மிகவும் அவசியம். சிலரெல்லாம் பேசினால் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவது



போல்தான் இருக்கும். குடும்பத்தில் பிரச்சனை என்றால் உங்கள் வார்த்தை கோபத்தை தணிப்பதாக இருக்க பிரயாசப்படுங்கள். எஸ்தர் சரித்திர புஸ்தகத்தில் ஆமானின் மனைவியைக் குறித்து வாசிக்கிறோம்.

ஆமான் மொர்தகாயின் மேல் கோபமாய் இருக்கிறான். அதை வீட்டில் சொன்னால் அவன் மனைவி அவனுக்கு ஒரு தூக்கு மரம் செய்து அதில் மொர்தகாயை போட வேண்டு மென்று வெறி ஏற்றிவிடுகிறாள்.

சில சமயங்களில் வீட்டில் பிரச்சனை வந்துவிட்டால் இதுதான் வாய்ப்பு என்று சொல்லி கணவனை உசுப்பிவிட்டு அப்படி கேளுங்க, நறுக்குணு நாளு கேள்வி கேளுங்க என்று சொல்வது ஆவிக்குரியவர்களுக்கு அழகல்ல.

உங்கள் கணவரோ, வீட்டாரோ கோபத்தோடு இருந்தாலும் உங்கள் வார்த்தைகள் அவர்களின் கோபத்தை தணிப்பதாய் அமையட்டும். குடும்பத்திற்குள் சமாதானத்தை கொண்டு வருகிறதாய் இருக்கட்டும். அப்பொழுது உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாய் விளங்கும்.

## 3. பணிவுள்ள அபிகாயில்

இந்த சம்பவம் நடைபெறும் போது தாவீது ஒன்றும் ராஜா கிடையாது. ஆனாலும் அபிகாயிலை பாருங்கள். காணிக்கைகளை ஆயத்தப்படுத்தி எடுத்துக்கொண்டு பணிவோடு தாவீதினிடத்தில் நடந்து கொள்கிறாள்.

தன் கணவரால் விரட்டப்பட்டவர்களை சந்திக்க போகும் இவளுக்குள் துணிவை பார்க்கிறேன். அதே சமயத்தில் பணிவை பார்க்கிறேன்.

ஆவிக்குரிய உலகில் துணிவிருக்கும் சில பெண்களுக்குள் பணிவு இல்லாதது வேதனைக்குரியது. அபிகாயிலின் பணிவை பட்டியலிடுகிறேன் சற்று கவனியுங்கள்.

(1 சாமு 25:18-28)

1) காணிக்கைகளை கொண்டுவந்து
2) தாவீதை காண்கையில் தீவிரமாய் கழுதையைவிட்டு இறங்கி
3) தரையில் முகம் குப்புற விழுந்து பணிந்து
4) அவன் பாதத்தில் விழுந்து
5) என் ஆண்டவனே என்று அழைத்து
6) தவறை தன் பேரில் ஒப்புக்கொண்டு
7) தாவீதின் அபஷேகத்தை கனப்படுத்தி

இந்த பணிவுகள் அவளுடைய வாழ்க்கையின் உயர்வுக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாய் அமைந்தது.

வஸ்தி மகா அழகுள்ளவள். இராஜாவினிடத்திலேயே ''வரமாட்டேன்''! என்று பதில் சொல்ல துணிவுள்ளவள். ஆனால் பணிவில்லாதவள். சீக்கிரத்தில் தன் ஸ்தானத்தை இழந்து போனாள். அன்பு சகோதரிகளே! என்னதான் தாலந்துகள் இருந்தாலும் பணிவில்லை என்று சொன்னால் நம்முடைய ஸ்தானத்தை இழக்கும் அபாய நிலை வாழ்க்கையில் வரக்கூடும். இது சிலருக்கு எச்சரிப்பு.

ஆகவே, தாழ்மையின் ஆவியால் என்னை நிரப்பும் ஆண்டவரே! என்று ஜெபிப்போம். தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கும் தேவன் தம் கிருபையை உங்கள் மேல் பெருகப்பண்ணுவார். அவருடைய கனத்தினால் நீங்கள் முடி சூட்டப்படுவீர்கள்.



கடைசியாக சகோதரிகளே! இந்த சத்தியங்கள் உங்கள் வாழ்க்கையில் நற்கிரியைகளை நடப்பிக்கட்டும். சிறந்த குடும்ப தலைவிகளாக, தேவ ராஜ்ஜியத்திற்கு பயன்படும் பெண்களாக நம்மை மாற்றட்டும்.

பூர்வத்திலுள்ள பரிசுத்த ஸ்திரீகளை போல பூலோகத்தில் வாழ்வீர்களாக. அவருடைய வருகையிலே அவரை எதிர்கொண்டு நிற்கும் உத்தம மணவாட்டிகளாக இருப்பீர்களாக. கர்த்தரின் கிருபை உங்களை தொடர்வதாக. ஆமென்.

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**